# தொண்டன்

எய்ட்ஸ் நோய் கூட
என்றோ ஒரு நாள்
விஞ்ஞானத்திடம்
தோற்றே ஓடும்
எப்போது ஓடும்
எமக்குள்ளிருந்து
ஒற்றுமை இன்மை?

பக் 2.

சமயங்கள் பொய்த்து விட்டதா? சமயங்களிடம் நாம் அதிகமாகவே எதிர்பார்த்து ஏமாந்துவிட்டோமா?

பக். 3

அக்டோபர் யுத்தத்தின் முதல் அம்பு அது! ஆனால் இந்த மண்ணில் யுத்தம் எப்போது ஆரம்பித்தது.?

பக். 11

மனித உழைப்பே கலைகள் பிறக்கக் காரணம். கலைகளில் நாம் அழகைக்கண்டு இரசிக்கின்றோம். கலைகளின் அழகு மனிதனால் ஆக்கப்பட்டது என்பது உண்மையாகும்.

பக். 18

1989 மே

4/50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


மே - 1989

மலர்: 21 இதழ்: 03

ஆசிரியர்;

கிங்ஸ்லி றெபட்

இணை ஆசிரியர்:

மலர்வேந்தன்

ஆசிரியர் குழு:

எஸ். லோகநாதன்
ஏ. ஜி. இராஜேந்திரம்
பி. ஜோசப்

வெளியீடு:

சமூகத் தொடர்பு நிலையம்,
திரி./ மட். மறை மாவட்டம்.

தொடர்பு:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTiCALOA.

விலை:

தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-


## உள்ளே...


1. எமது குரல் — 1
2. கவி ஆரம் — 2
3. சமயங்கள் வேண்டாம் — 3
4. தூதுவரும் தூது — 5
5. மாணவர் பக்கம் — 7
6. சந்தனச் சிதறல்கள் — 10
7. உன் இதயம் — 13
8. தமிழ் நாவல்... — 15
9. லாவண்யம் — 16
10. உழைப்பும் கலையும் — 17
11. நாலாயிரம் — 21
12. சுடர்விடும் தீபங்கள் — 22
13. குறளோவியம் — 24
14. இலங்கையின் முதலா ... — 25
15. விவிலியப் புதிர் — 27


கடவுளின் அரசை குழந்தை போல் ஏற்றுக் கொள்ளாத எவனும் அதனுள் நுழை யவே முடியாது.

மாற் 10/13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது குரல்......

'ஒரு குழந்தை பிறந்திருப்பதாகக் கேள்விப் படும்பொழுது மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனெனில் கடவுள் இவ்வுலகைப் புறக்கணிக்கவில்லை என்பது தான் இதற்குப் பொருள்.'

இவ்வாறு கூறியவர், இந்தியக்கவிஞர் இரவீந்திரநாத் தாகூர்.

இறைவனின் அன்பின் வெளிப்பாடுகளான குழந்தைகள் மனிதனது அணுவாயுதப் போர் வெறியால், ஏகாதிபத்திய விஸ்தரிப்பு ஆசையால் அநியாயமாக அழிக்கப்படுகின்றன என்று அறிய வரும் போது நெஞ்சு பதைத்துப் போகிறது.

அணுக் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்ட உணவுகளை உண்டு இலட்சக் கணக்கான குழந்தைகள் மடிகின்றன - பயங்கர நோய்களுக்கு உள்ளாகித் தவிக்கின்றன என்று பத்திரிகைச் செய்திகள் அச்சந் தெரிவிக்கின்றன. அதுவும் மூன்றும் மண்டல நாடுகளின் குழந்தைகளே இந்தப் பேரழிவுக்குப் பெரும்பாலும் உள்ளாக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்ட உணவுவகைகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்துப் பரீட்சித்துப் பார்க்கும் கொடூரச் செயல்களும் நடைபெறுகின்றனவாம்.

மாசற்ற குழந்தைகள் மீது நடாத்தப்படும் இத்தகைய பாதகச் செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மனிதனது அளவு கடந்த சுயநல வெறிகளுக்கு அப்பாவிக் குழந்தைகள் பலியாவதை ஒரு போதும் அனுமதிக்கக் முடியாது.

*    *    *    *

மீண்டும் பேச்சுவார்த்தை, சமாதானம், ஜனநாயக நீரோட்டம் என்ற பல்லவிகள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

இவைகள் அலுத்துப்போன, அவநம்பிக்கை நிறைந்த சங்கதிகள்தான் என்றாலும் அனைவரும் எதிர்பார்க்கின்ற அவசியமானவையுங் கூட.

கடந்த காலங்களில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளும், ஒப்பந்தங்களும் இலக்குத்தவறியே போயின. காரணம் சம்பந்தப்பட்டவர்களிடம் இதயசுத்தி இல்லை.

அடிப்படை பலமின்றி ஆரவாரங்கள் பயன்தராது.

காட்டுக்குள் இருப்பவர்கள் நாட்டுக்கு வருவது நல்லதுதான். ஆனால் நாடே காடாகக் காட்சிக் தரும்போது .. எதுவும் நடந்துவிடும் என்று நம்பத் தோன்றவில்லை.

அரசியல் 'ஸ்டண்டு' களுக்குப் பின்னணி இருப்பதுண்டு.
இப்போது இதன் பின்னணி என்ன?
பொறுத்திருந்து பார்ப்போம்.

**மலர் வேந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி ஆரம்

## விரால்களும் விரல்களும்

தோரணங்கள் தொங்கட்டும்
தொன்று தொட்டு நாங்கள் தானென்ற
பெருமைப்
பேச்சுக்கள் பெரிதாய் ஒலிக்கட்டும்
நீ நட தோழா!
நெஞ்சை நிமிர்த்தி
அப்பச்சட்டியை நீ அறியாயா?
கீழும் மேலும் அதற்கு நெருப்பு
ஆனாலும்
அந்தத் தீக்குளிப்பில் தானே
அழுகின்ற பிள்ளைக்கு
அப்பம் கிடைக்கின்றது
மக்களை நேசி
உன்னை
மறுதலிப்போர் முகத்தில்
காறித் துப்பு
ஆனால்
உன் சின்ன விரலின்
சிறு நகம் கூட
மக்களின் மாண்பிற்கு எதிராய்
தன்னை
நிமிர்த்தாது இருக்கட்டும்
வெற்றியின் தாமதத்திற்காய்
வேதனைப் படாதே
கரப்புக்களைத் தூக்கி
ஓங்கிக் குத்து
உனது விரல்களுக்குள்ளும்
விரால்கள் அகப்படும்
அப் பொழுது அழு
தோல்விகளுக்கும் துயரங்களுக்குமாய்ச் சேர்த்து
அது
வெற்றியின் கண்ணீராகவே
விளக்கம் பெறும்

● சாருமதி

## எப்போது ஓடும்

அடிமனதில்
குதூகலித்துக்கொண்டு
கொலைகளும்
பழிவாங்கலும்
பாதையோர
சுவரொட்டிகளில்
பரிதாபமாய் ..
என் தேசத்தின்
ஐக்கியமும்
சமாதானமும்


நிர்ப்பந்தங்கள்
நாள் செல்ல
நாள் செல்ல
ஒப்பந்தங்களாக
தியாகங்களை
தொலைத்துவிட்டு
வெறும் திகதிகளுடன்
தடுமாறிக்கொண்டிருக்கின்ற
என் தேசத்து வரலாறுகள்
விடிந்தது முதல்
விநாடிகளுக்கே
வேகம் கற்பிக்கும்
விளக்கமற்ற
கொலைத்தொடர்கள்
இந்த மண்ணின்
விடிவுக்கு முந்திய
மரணங்கள், அல்ல
விடிவின் அத்திரவாரத்தையே
அழிக்கத் துடிக்கின்ற
அராஜகங்கள்
''எய்ட்ஸ்'' கூட
என்றோ ஒரு நாள்
விஞ்ஞானத்திடம்
தோற்றே ஓடும்
எப்போது ஓடும்
எமக்குள்ளிலிருந்து
ஒற்றுமையின்மை

● நிலாவெளி கைலைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயங்கள் வேண்டாம்!



சமயங்கள் அனைத்தும் அன்பை, நீதியை மனித நேயத்தை, சமாதானத்தை வலியுறுத்துகின்றன. ஆயினும் அமைப்பு ரீதியாக வளர்ந்துள்ள சமயங்கள் சில போது தமக்குள்ளே மோதி அடிப்படைக் கொள்கைகளுக்கே ஊனம் விளைவிக்கின்றன. இதனால் சமயமே வேண்டாம் என்னும் அளவுக்கு பிரிவினையும் பகையும், பூசலும் ஆங்காங்கே எழுகின்றன.

ஏன் இந்த நிலை? சமயங்கள் பொய்த்து விட்டதா? அல்லது சமயங்களிடம் நாம் அதிகமாகவே எதிர்பார்த்து ஏமாந்து விட்டமா? சமயங்களுக்கு மாற்று அமைப்பு உண்டா? அல்லது நமக்குத் தேவைப்படுவது புதியதொரு சமயமா? சமயம் நம் இறைப்பற்றை நிறுவனப் படுத்திய அமைப்பாகிறது. இதில் மூன்று அம்சங்கள் உண்டு.

நம்பிக்கைகள், வழிபாடுகள், வாழ்க்கை நெறி,- இம் மூன்றும் நம் அறிவு, உணர்வு, செயல்பாடு- ஆகிய மூன்று நிலைகளையும் இணைந்து உருக்கொடுக்கின்றன.

இந்த அமைப்பு ஒரு கட்டுக் கோப்பாக மட்டும் மாறும்போது, சமயப் பூசல்கள், சண்டைகள், சமய வெறியே தலைதூக்கிவிடுகிறது.

ஆம், நிறுவன அமைப்பு தன்னையே காத்துக் கொள்ளவும், பிறரை அடக்கி ஆளவும் வழிந்தோடுகிறது. எனவே நிறுவன முறையில் மட்டும் உரையாடலுக்கோ, உண்மை உறவுகளின் பகிர்வுக்கோ தக்கவழி பிறக்காது. காரணம் நிறுவன அமைப்பு 'பலம்' 'கௌரவம்' ஆகிய போலி மதிப்பீடுகளுக்கு தன்னையே அடிமைப்படுத்திச் சிறைப் படுத்திச் சிக்கிக்கொள்கிறது. இந்நிலையில் நிறுவன அமைப்புகள் விடுதலை தேடுகின்றன.

சமயங்களின் அமைப்பு முறையைக் கடந்து நிற்பது சமயத்தவரின் சொந்த விசுவாச வாழ்வு. இப்பற்று உருவிலே கடவுள் நம்பிக்கை கொண்ட அனைவரும் இணைகின்ற நிலை உருவாகிறது.

இவ்வுலகிலே இறைவன் எல்லா மக்களுக்கும் தந்தை. நாமெல்லோரும் சகோதர சகோதரிகள் என்ற நோக்கும் போக்கும் உதயமாகின்றன. எனவே சமய வேற்றுமைகளுக்கு அப்பாற் பட்டு சமயத்தின் சாரமாகிய இறை மனித உறவை மையமாக்குகிறோம்.



இவ்விசுவாச வாழ்வில் கோட்பாடுகளின் இறுக்கமோ சடங்குகளின் சம்பிரதாயமோ, நம்மைக் கட்டுவதில்லை. பிற சமயத்தவரைத் தவிர்த்து நிற்காது இணைந்து கூடுவதற்கு வழியாகிறது. இறையியல் நோக்கில் இதை கிறிஸ்து மைய நோக்கி

# ஆன்மீகம் வேண்டும்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லிருந்து இறை மைய நோக்கிற்கு ஒரு கடத்தல் என்கிறோம். ஆக, இறை மனித உறவை விசுவாசத்தின் உயிராகக் கொள்ளும் போது விசுவாச வாழ்வு மனித சமுதாயத்தைத் தழுவுகிறது. சமய வாழ்வு ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறையில் செயல்பட்ட போதும் பிறசமயங்களோடும் திறந்த உறவு கொள்கிறது.

விசுவாச உறவு அர்ப்பணக் கனியாகாவிட்டால் அது உயிரற்ற உறவென்றே சொல்ல வேண்டும். செயலற்றவிசுவாசம் செத்த விசுவாசம்தானே.

இங்கு தான் விசுவாச உறவுகள் சமயத்தையும் கடந்து செல்கின்றன. அதாவது சமயத்தைச் சாராதவரும் குறிப்பாக அர்ப்பண வாழ்வு நடத்துவோர் அனைவரும் இணைய வழி பிறக்கிறது.

இத்தகைய அர்ப்பண ஐக்கியத்தில் உண்மைக்காக, நீதிக்காக, அன்புக்காக, வாழ்வோர் ஒன்றுபடும் இயக்கம் உருவாகிறது. இனி இவ்வுறவு சமய நிறுவனமாகவோ, குறுகிய சபையாகவோ இருக்க முடியாது. மாறாக மனித நேயத்தின் சங்கம சரித்திரமாகிறது.

## எய்ட்ஸ்!

எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை உண்மையில் 3 இலட்சத்து 3500 ஆகும் ஆனால், உலக சுகாதார நிறுவனத்தில் ஒன்றறை இலட்சம் பேர் என்று மட்டுமே பதிவாகி இருக்கிறது. 1990ல் புதிதாக 4 இலட்சம் பேர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு அதற்குள் தீவிரநடவடிக்கை எடுத்துத் தீர்வு காணவேண்டும் என முயற்சி செய்துவருகிறது உலக சுகதார நிறுவனம்.

அர்ப்பணம் ஒன்றே (ஆன்மீகம் ஒன்றே) உறவின் அடிப்படையாகும் போது பிறருக்காக வாழ விழைவோர் எல்லோருக்கும் இது அழைப்பு இதில் சமய வேற்றுமைகளைக் கடந்து விசுவாச உறவின் ஒன்றுமையையும் தாண்டி மனித நேய ஆன்மீகம் உதயமாகிறது.

~~~~~~~~~~~~~~~~~~~~~~

**அருள்திரு சேவியர் இருதயராஜ்**

~~~~~~~~~~~~~~~~~~~~~~

ஆம்! அர்ப்பண வாழ்வில்தான் (ஆன்மீகத்தில்) உண்மையான விசுவாசம் நிறைவடைகிறது. இறைப்பற்று உயிர் பெறுகிறது. இவ்வுறவில்தான் சமய உரையாடல் வளரமுடியும் கனிகொடுக்கவும் முடியும். எனவே யேசுவில் கொண்டுள்ள ஆழ்ந்த விசுவாச உறவு இறை மைய விசுவாசத்திற்கும், உண்மை மதிப்பீடுகளுக்கும் வாழ்ந்து, அர்ப்பணமாகும் புதிய திருமுழுக்கிற்கும் நம்மை இட்டுச் செல்கிறது.

## தாய்மார்களுக்கு!


குழந்தை பெற்ற பெண்கள் முருங்கைக் கீரை, பச்சைப் பயறு ஆகியவற்றை உணவில் தாராளமாகச் சேர்த்து வந்தால் குழந்தைக்குத் தாய்ப்பால் தங்கு தடையின்றிக் கிடைக்கும்.

இந்த அர்ப்பணத் திருமுழுக்கு சிலுவையில் நிகழ்ந்தது. சமயங்களும் சிலுவையில் அறையப்படும் போது தான் அர்ப்பண உயிர்ப்பு மலரும் இத்தகைய பாஸ்காவிற்குத்தான் சமய உரையாடல் நம்மை அழைக்கிறது. இப்பாஸ்கா உரையாடல் வழியே இதயங்கள் இணைய சிறந்த மார்க்கம் இன்றைய சமுதாயம் தேடும் சமயமும் இதுவே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூது வரும் தூது

## ஓர் அறிமுகம்

தூது என்ற பெயரால் ஒரு கவிதை (கள்) மடல் சாய்ந்தமருதுவிலிருந்து வெளி வருகிறது. 1988 அக்டோபர் இதழ் 1989 மார்ச்சில் தான் கையில் கிடைத்தது. ஆறு பக்கங்கள். ஆசிரியர் உரை நீங்கலாக ஏழு கவிதைகள், சிறு கவிதைகள்தான் ஆனாலும் சீற்றம் தெரிகிறது. அத்தனையும் புதுக்கவி தைகள். ஆசிரியர் ஆர். எம். நௌஸாத் நிர்வாக ஆசிரியர் எஸ். எம். எம். ருபிக். இஸ்லாமிய சகோதரர்களின் வெளியீடு என்பதனாலோ என்னவோ (பெரும்பாலும் அவர்கள் தான் எழுதுகிறார்கள்) கவிதைகளில் அரபுச் சொற்கள் பரவலாகத் தெளிக்கப்பட்டிருக்கின்றன. தமிழோடு அரபைக் கலந்து ததிங்கனத்தோம் போடுவதில் என்னதான் இன்பமோ? (நமக்குத்தான் பல் உடைபடுகிறது) எடுத்துக்காட்டு இது.

பெருக்கெடுத்தோடும் இந்த
இரத்த 'ஷம் ஷம்' மை
மறித்துக் கட்ட\
எங்கே நம் ஹாஜருக்கள்?
இந்த 'தர்பலா' காண
எங்கே நம் ஹுஸைனர்கள்?

உங்களுக்கு ஏதும் விளங்குகிறதா? அந்த 'அல்லா' வுக்குத்தான் வெளிச்சம்!

இன்னொரு கவிதையின் இலக்கியச்சுவை யோடு கூடிய நையாண்டி வரிகள் இவை.

இப்போதும்
எத்தச் சீதையை
இந்த மண்ணில்
மறைத்து வைத்தனரோ?
அவ்வப்போது
எரிந்து கொள்கிறது
இந்தத் தீவு
கொளுத்திப் பார்ப்பது
அனுமான்கள் தானா?
இன்னொரு தோற்றமாய்
இராம இராவணன்
இருக்கலாம் தானோ?

இத்தகைய சுவையான வரிகளும் ஆங்காங்கே பளிச்சிட்டு நிற்கின்றன. கடைசிப்பக்கத்தில் காணப்படும் வீ. ஆனந்தனின் 'புதிய பரதீஸ்' தமிழினத்தின் விடுதலை போராட்டம் குடும்பச் சண்டையால் குட்டிச்சுவரான ஏமாற்றத்தை அழகாக, ஆழமாக வெளிப்படுத்துகிறது. ஒவ்வொருவரியிலும் எத்தனை அர்த்தங்கள்! வரலாற்றையே தன்னும் புதைத்துக் கொண்டு விவிலிய வாசனையோடு வலம் வருகிறது. அதனை அப்படியே தருகிறோம்.

ஆதி பிதா ஆதம் மக்கள்
ஆபேலும் காயினும்
போரிட்டு வீழ்ந்தகதை
புவியில் இன்னும் தொடர்கிறதா?
யாரிட்ட சாபமிது?
அண்ணனும் தம்பியும்
போரிட்டு மாய்தல் எனும்
புன்மை மிகு கதை தொடரல்
தாயும் தந்தையும்
தவறிழைத்த காரணத்தால்

---

## கண்கள் ஜாக்கிரதை!

கண்களுக்கு அதிகமாக வேலை கொடுப்பவர்கள் வைட்டமின் ஏ சத்துள்ள உணவுப் பொருள்களைச் சாப்பிட வேண்டும் வைட்டமின் ஏ சத்து பொன்னாங்காணிக் கீரை, கரிசலாங் கண்ணிக் கீரை, அரைக்கீரை, முள்ளங்கி, முட்டை பால் இவற்றில் நிறைய இருக்கிறது. ஒரு நாளைக்கு ஒரு கீரை சாப்பிடுங்கள் முட்டை கலந்த பாலை ஒரு நாள் விட்டு ஒரு நாள் சாப்பிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடன் தோட்டத்தை
இழந்த பரம்பரையே
உங்களுக்குள் நீங்களே
குத்திவெட்டிக் கொலைபுரிந்து
சத்தியத்தைச் சாகடித்து உங்கள்
சரித்திரத்தைத் தொலைத்திடுவீர்?
சர்ப்பத்தின் சூழ்ச்சிதனை அறியாள்
கர்ப்பத்தில் இருந்த காரணத்தினாலே
சாத்தான் செய்யும் சதி அறியாமல்
விற்பிடித்துப் போர் புரிந்து
வீணே மடிகின்றீர்?
போர் வெறியறியா புதிய பரதீசை
ஆக்கும் பணியில் அணிதிரள்வீர்
என்றிருந்தோம்
சாக்காடாய் வெறும் சவக்குழியாய்
நாட்டை ஆக்கத்துடிக்கும் உங்கள்
அறியாமை ஈதென்னே

இவ்வாறு கனதியான கவிதைகளையும் தன்னுள் பொதித்துக் கொண்டு தூதுவருகின்ற தூதுக்கு ஏப்ரலோடு ஆறு ஆண்டு நிறைகிறதாம் அதிசயந்தான். இத்தனைகாலமும் நமது கண்ணில்படாது.......

சரி, கடுகு சிறிதானாலும் காரம் இருக்கிறது. கவிதைப் பிரியர்களுக்கு இது கட்டாயம் இனிக்கும் தொடர்பு கொள்ள விரும்புவோர் 503, பிரதான விதி, சாய்ந்தமருது 01, என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

எம். வி.

---

பிறரிடம் நம்பிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று நான் வெறுமனேபோதிக்க மாட்டேன். நீங்கள் நம்பிக்கையுடன் நடந்து கொண்டால் தான் உங்கள் வாழ்க்கை பயன் மிகுந்ததாய் அமையும்.

---

# மருத்துவக் குறிப்பு

## துயர் தீர்க்கும் தூதுவளை

தமிழ் இலக்கியத்தில் தூதுவளையைத் தூதுணம் என்று கூறுவர். இக்கீரையின் வேறு பெயர்கள் தூதுளை. தூதுணம், அலர்க்கம், கங்கவல்லி ஆகியவை.

இத்தூதுவளைக்கீரை மருந்துக்குப் பயன்படுவதுடன் உணவுடன் சேர்த்து உண்பதற்கும் ஏற்றது. இக்கீரையை நெய்யில் வதக்கி துவையல், கடையல், குழம்பு போன்ற பதார்த்தங்களாகச் செய்து சோற்றுடன் உண்ணலாம்.

இக் கீரையின் பூ, காய், பழம், வேர் ஆகியவைகள் பொதுவாக உடலுக்கு வெப்பத்தைக் கொடுக்ககூடியவைகள். இக்காரணத்தால் உடலில் சேரும் கோழையை அகற்றும் ஆற்றல் இதற்குண்டு. அத்துடன் உடலுக்கு உறுதியைத் தரும்.


தூதுவளைக்கீரையை பசுவெண்ணெய் யுடன் சேர்த்துக் காய்ச்சி எலும்புருக்கி நோய் உடையவர்களுக்கு கொடுத்தால் நல்ல பலன் அளிக்கும். மேலும் கபக் கட்டு விலகும். புத்தித் தெளிவு உண்டாகும். அறிவை வளர்க்கும். இக்காரணங் கொண்டே இக்கீரையை ஞானிகள் ஞானக்கீரை என்று கூறுவர்

இக்கீரைத்துவையல் பசியை உண்டாக்கும். வாயுவைக்கண்டிக்கும். தினசரி இக்கீரையைச் சேர்த்துக் கொண்டால் விஷசுரத்தால் ஏற்படும் காது மந்தம் நமைச்சல், உடம்பு எரிச்சல் ஆஸ்துமா நோய் ஆகியவை நீங்கும் நிமோனியா டைபாய்டு கபவாத ஜுரம் சன்னி வாத சுரம் போன்ற நோய்களுக்கு அருமருந்தாகிறது.

J. A. மஞ்சுளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாணவர் பக்கம்

# அப்போஸ்தலர் பணி - IX

**க. பொ. த. உயர்தரம்**

### திருச்சபையில் குழப்பம்

சின்னப்பர், பர்னபா இவர்களின் மறை பரப்புப் பணியால் புறவினத்தார் மிகக் கூடுதலான எண்ணிக்கையில் திருச்சபையில் சேர்ந்திருந்தனர். புறவினத்தாரின் எண்ணிக்கை அதிகரிப்பானது திருச்சபையில் பெரியதொரு பிளவை ஏற்படுத்தும் நிலைக்குக் கொண்டு வந்தது. கிறிஸ்தவம் இரு கூறாகப் பிரியும் கட்டத்தில் இருந்தது.

### யூதக் கிறிஸ்தவர்கள்

எருசலேம் திருச்சபையில் எல்லோரும் யூதர்களாக இருந்தனர். யூதர்களின் மனநிலைப் படி யூதர்கள் மட்டுமே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இறைவன் அவர்களுக்கு மட்டுமே உரிமையானவர் என்று ஆணித்தரமாக நம்பி வந்தனர். எருசலேமில் வாழ்ந்த யூதக் கிறிஸ்தவர்கள் புறவினத்தாருடன் எவ்விதத் தொடர்பும் அற்றவர்களாக இருந்தனர். புறவினத்தாரின் வீட்டுக்கு உண வருந்தப் போவது பற்றி கனவிலும் நினைக்க மாட்டார்கள். ஓர் உண்மையான யூதன் புறவினத்தானோடு எந்த விதமான தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாது. அவனை விருந்தினனாகவோ நண்பனாகவோ எந்த யூதனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். இன்னும் கூறப்போனால் வியாபாரத் தொடர்பு கூட வைத்துக் கொள்ள மாட்டான். அப்படியிருக்க புறவினத்தான் ஒருவன் திருச்சபையில் அனுமதிக்கப்பட்டால் எந்த அளவிற்கு யூதன் அவனோடு தொடர்பு வைத்துக் கொள்ள முடியும். எனவே புறவினத்தாரின் விருத்த சேதனம் ஒரு பிரச்சனையாக உருவெடுத்தது.

> இனிமையான குணநலம் கொண்ட நல்ல மனிதன் தன்னைச் சுற்றியுள்ள மற்றவர்களையும், தன்வாரிசுகளாகவே மாற்றிவிடுகிறான்.
>
> கிரிஸ் நாட்டுப் பழமொழி

### யூத மறையைத் தழுவிய புறவினக் கிறிஸ்தவர்கள்

எருசலேமில் யூத மறையைத் தழுவிய புறவினத்தார் பலரும் இருந்தனர். அவர்கள் அனைவரும் யூதச்சட்டத்தின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டவர்களாக இருந்ததால் யூதர்கள் இத்தகையவர்களை ஏற்றுக் கொண்டனர். யூத மறையைத் தழுவியவர்கள் தங்கள் புறவினப் பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் விட்டு விட்டனர். ஏனைய யூத கிறிஸ்தவர்களைப் போன்று அவர்களும் ஆலய வழிபாடுகளுக்குச் செல்ல முடிந்தது. எனவே தான் ஒரு புறவினத்தான் திருச்சபையில் சேருமுன் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும். அவன் மோயிசனின் கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்த்தனர். இன்னும் கூறப்போனால் ஒரு புறவினத்தான் கிறிஸ்தவனாக மாறுமுன் அவன் ஒரு யூதனாக மாறவேண்டும் என்று யூதர்கள் எதிர்பார்த்தனர். இவ்விதமாக யூத நெறிப்படி திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கவும், விருத்த சேதனம் செய்து கொள்ளவும் வேண்டுமென்று கட்டாயப்படுத்தியதால் அதுவே திருச்சபையில் குழப்பத்திற்கு வித்தாக அமைந்தது.

### புறவினக் கிறிஸ்தவர்கள்

எருசலேமில் புறவினக் கிறிஸ்தவர்கள் எவருமே இருக்கவில்லை. இராயப்பர் கொர்னேலியுவையும், பிலிப்பு ஆபிரிக்கஇனத்தவனையும் மனந்திருப்பியிருப்பினும் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருசலேமுக்கு வெளியே வாழ்ந்ததால் அதனைப் பெரிதும் பொருட்படுத்தவில்லை. அந்தியோக்கில் இருந்த திருச்சபை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. சின்னப்பரும் பர்னபாவும் முதல் மறைபரப்பும் பயணம் முடிந்து திரும்பியவுடன் அந்தியோக்கியாவில் சிறிது காலம் தங்கி அங்குள்ள புறவினத்தாருக்கு நற்செய்தியை அறிவித்து அவர்களை விசுவாசத்தில் திடப்படுத்தி வந்தனர். இராயப்பரும் அந்தியோக்கியாவுக்கு வந்து சிறிது காலம் அவர்களுடன் தங்கினர். புறவினத்தாருடன் வழிபாடுகளுக்குச் சென்றார். (நற்கருணை) விருந்துகளிலும் கலந்து கொண்டார். அதாவது புறவினத்தாரின் வீட்டில் அப்பத்தை உண்டு இரசத்தைப் பருகியிருந்தார்.

## இராயப்பரின் வெளிவேடம்

இவ்வேளையில் எருசலேமிலிருந்து சிலர் (பரிசேயக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடும்.) அந்தியோக்கியாவிற்கு வந்திருந்தனர். அவர்கள் வருமுன் புறவினத்தாருடன் உண்டு வந்த இராயப்பர், அவர்கள் வந்தபோது புறவினத்தாருடன் உண்ணச் செல்லவில்லை. லூக்கா இதுபற்றி விபரமாக எதுவும் குறிப்பிடவில்லை. ஆயினும் சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய திருமடலில் இச்சம்பவத்தை விபரித்திருக்கிறார். (காண் -கலாத் 2/111-4) அதாவது சின்னப்பர் தனது மடலில் இராயப்பர் செய்த குற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறார். இராயப்பரின் வெளிவேடத்தைக் கண்டிக்கிறார். இராயப்பரை நேருக்கு நேர் எதிர்த்துப் பேசியதாகக் கூறுகிறார். திருச்சபையின் தலைவராக இருந்தாலும் அவர் செய்தது குற்றமே என்பதை தெளிவுபடுத்துகின்றார். இராயப்பரின் இச்செய்கையானது பர்னபாவையும் கவர்ந்ததாக கூறுகின்றார்.

## குழப்பத்தின் ஆரம்பம்

எருசலேமிலிருந்து வந்தவர்கள் புறவினத்தாருடன் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் புறவினத்தாரைக் கட்டாயப்படுத்தி யூதராக மாறும்படி அச்சுறுத்தவும் ஆரம்பித்தனர். அதாவது புறவினத்தார் முதலில் யூதராக மாறட்டும். ஓய்வு நாளை, விருத்தசேதனத்தை, உணவு சம்பந்தமான யூத சட்டங்களை ஏற்றுக் கொள்ளட்டும் என்றனர். இந்த நிலை நீடித்திருக்குமாயின் கிறிஸ்தவ மதம் யூத மதத்தின் ஒரு பிரிவாகவே வளர்ந்திருக்கும். எனவே சின்னப்பரும் பர்னபாவும் யூதர்களோடு தீவிரமாகப் போராட வேண்டியிருந்தது.

## சின்னப்பரின் கண்ணோட்டம்

சின்னப்பர் இத்தகைய எண்ணங்களுக்கு எதிராக இறுதிவரை போராடவும் துணிந்தார். தமஸ்கு அனுபவத்தின் பின் சின்னப்பரின் கண்ணோட்டம் புதியதாக அமைந்திருந்தது. இயேசுவின் வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு யாவும் எல்லா மனிதரையும் இறைவனுடன் ஒப்புரவாக்கி விட்டது. இயேசு யூதர்களுக்கும் புறவினத்தாருக்கும், கறுப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும், பாவிகளுக்கும் புனிதர்களுக்கும் மீட்பர்; ஆண்டவர், அரசர் என்பதை உணர்ந்தார். கிறிஸ்தவர்கள் விசேடமுறையில் கடவுளின் மக்கள். திருச்சபையே புதிய இஸ்ராயேல். கிறிஸ்தவர்கள் விசுவாசத்தினால் மீட்படைந்தவர்கள். அவர்கள் கடவுளின் அருளினால் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகின்றார்கள். அருள், தகுதியற்ற மனிதனை ஆட்கொள்ளும் வரையறையற்ற இறைவனின் கொடை

## சட்டத்திலிருந்து விடுதலை

எனவே அருள் பொங்குமிடத்தில் சட்டத்திற்கு முக்கியமில்லை என்பதை ஆணித்தரமாக நம்பினர். யூதச்சட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டது. யூதச் சட்டம் யூத மறையை

---

**உண்மையான அறிவாளிகள் சிலவேளைகளில் மட்டும் செருக்குறலாம். ஆனால் எக்காலத்திலும் அவர்கள் அடக்கத்தை மீறவே மாட்டார்கள். ஏனெனில் அறிவைப் போல் அடக்கத்தைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் இந்த உலகத்தில் வேறெதுவும் இல்லை.**

—புலவர் லிட்டன்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், யூத இனத்தையும் பாதுகாத்தது. யூத ஆசிரியனாக கடமையாற்றியது. மெசியாவின் வருகை வரை கடவுளின் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியனாகக் கடமையாற்றியது. ஆனால் இப்பொழுது மெசியா வந்து விட்டபடியால் பள்ளி ஆசிரியன் தேவையில்லை. அவர்கள் வளர்ந்து விட்டார்கள். வயதுக்கு வந்து விட்டார்கள். சட்டத்தினின்று விடுதலை பெற்று விட்டார்கள். திருச்சபையில் நுழைவதற்கு விருத்த சேதனம் முக்கியமல்ல. திருமுழுக்கு அவசியமானது என்பதையே அவர் வலியுறுத்தி வந்தார். சின்னப்பர் வலியுறுத்திக் கூறி வந்த கொள்கையான சட்டத்தினின்று விடுதலை' இதுதான்.

இப்படியிருக்க யூத மறைக் கோட்பாடுகளையும், விருத்தசேதனத்தையும் புறவினத்தார் மீது திணிப்பதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இப்பிரச்சினை வலுப்பெற்றதும் அது திருச்சபையின் ஒற்றுமைக்கு அபாயமானதாகத் தெரிந்தாலும் இதனைத் தீர்த்து வைக்க எருசலேமிலுள்ள அப்போஸ்தலர், மூப்பர்களிடம் செல்லத் தீர்மானித்தனர். இப்பிரச்சினைக்கு முடிவு காணாமல் 'திருச்சட்டம் தேவையில்லை' என்று தொடர்ந்து போதிப்பதால் பிரிவினையே வளரும். எனவே திருச்சபையின் தாயகமான எருசலேமிற்கு விண்ணப்பம் செய்யப்பட்டது. அந்தியோக்கிய சபையின் பிரதிநிதிகளாக சின்னப்பரும், பர்னபாவும் செல்கின்றனர்.

## வினாக்கள் :

1. எருசலேம் திருச்சபையிலிருந்து அந்தியோக்கியா திருச்சபை எவ்வகைகளில் வேறுபட்டதாக இருந்தது?
2. அந்தியோக்கியா திருச்சபையுள் பிரச்சனை எழுவதற்கான காரணம் என்ன?
3. சந்தர்ப்பம் கூறுக: 'மோயிசனின் முறைப்படி விருத்தசேதனம் செய்து கொள்ளாவிட்டால் நீங்கள் மீட்படைய முடியாது'
4. எருசலேம் திருச்சபையினர் எதனை வலியுறுத்தினர்?
5. சின்னப்பர் ஒருமுறை இராயப்பரை நேருக்கு நேர் எதிர்த்தாக கலாத்தியர் நிருபத்தில் காணப்படுகின்றது. அவ்வாறு எதிர்த்ததற்கான காரணம் என்ன?
6. சின்னப்பரின் 'சட்டத்தினின்று விடுதலை' என்ற கொள்கையை விளக்குக?
7. திருச்சபையில் எழுந்த சிக்கலை எப்படித் தீர்ப்பது என முடிவெடுக்கப்பட்டது?

### பல்லுப்போனால் . . !

எலும்பிற்கு வலுவையும், பற்களுக்கு உறுதியையும் தொடர்ந்து ஊட்டி குளிர்காலத்தில் கூட சளிபிடிக்காமல் பார்த்துக் கொள்ளும் விற்றமின் எது? சி விற்றமின்தான். புளிப்புச் சுவையுள்ள சி விற்றமின் ஆரஞ்சு, எலுமிச்சைப்பழம், முட்டைக்கோஸ், கொய்யா, நாவல் பழம், நெல்லிக்காய் போன்றவற்றில் அதிகம் கிடைக்கிறது. இவற்றில் ஒன்றிரண்டாவது உங்கள் உணவுப் பட்டியலில் இடம் பெறட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தனச் சிதறல்கள்

கோகிலா மகேந்திரன்

## —10—

கிருப்ஸ்ஸும் றொபேட்டும் தங்கிருயிக்கும் வீட்டில் இன்னொரு பகல் மடிந்தது.

அன்றும் மின்சாரம் இருக்கவில்லை. 'கொழுவல்' வேலைகளினால் திருநெல்வேலிப் பகுதி அடிக்கடி இருளில் மூழ்கி விடுகிறது. திரைகளின் தேசமெங்கும் இருட்டின் ஆதிக்கம்.

ஒரு மெழுகுதிரியை மேசையில் கொழுத்தி வைத்துக் கொண்டு அதையே பார்த்துக் கொண்டிருந்தான் கிருப்ஸ்.

இருளில் மின்மினிப்பூச்சி போல இடையிடை அந்த நினைவு வேடிக்கை காட்டி மனதை எரித்தது.

'என்னடா; திண்ம மெழுகு திரவமாகிறதும், திரவ மெழுகு ஆவியாகிறதும் மெழுகு ஆவி எரியிறதும் ஆறாம் வகுப்பில பார்க்கிற சயன்ஸ் பரிசோதனை இப்ப செய்து வலு கவனமாக அவதானிக்கிறாய்?' என்று கேட்டான் றொபேட்.

'திரியின்ரை அருகாலை மெழுகு கரையுது. திரியும் கருகுது. அது தான் பாக்கிறன்' என்றான் கிருப்ஸ்.

வாகை மரத்தில் இருந்து ஆந்தை ஒன்று அவலக்குரல் எழுப்பும் ஒலி கேட்டது.

'இது பேரின வாதத்தின்ரை ஓலம்' என்றான் றொபேட்.

'நீ எங்கடை இனத்தின்ரை பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கிறாய். நான் சொந்தப் பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கிறன்...'

கிருப்ஸின் குரலில் உணர்வுகளெல்லாம் பஞ்சுப் பிசுறுகளாய்ப் பறந்தன.

'ஏனடா? உனக்கிப்ப என்ன பிரச்சினை? மேரிக்கும் பின்னாலை மேத்தாவின்ரை கவிதை வரிகளோட திரிஞ்சாய்?'

'அதெல்லாம் முடிஞ்ச கதையாப் போச்சு'

'ஏன்? நான் சொல்லச் சொல்லக் கேளாமல் வால் பிடிச்சனி... என்ன நடந்தது இப்ப?'

'திஸ் இஸ் நன் ஒஃப் யுவர் பிசினஸ் எண்டு அவள் நளினி, ராம் கிறிஸ்ரோபர் எல்லாருக்கும் முன்னாலை என்னைத் தூக்கி எறிஞ்சு கதைச்சிட்டாள்.

மேரிக்கும் அவனுக்கும் இடையில் இருந்திருக்கக் கூடிய மெல்லிய நட்பு இழைகளையும் அவன் சின்னா பின்னமாக்கிக் கொண்டு வந்திருக்கிறான் என்பது றொபேட்டுக்குப் புரிந்தது.

மெதுவாக அவனுக்கு அருகில் சென்று விபரித்த சம்பவத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்'

'குகநாதனோடை இப்பிடிப் படம் எடுத்துப் போட்டு அதை வைச்சிருக்க வேணும்எண்டும் விரும்பிறாள். கிறிஸ்ரோபரோடை டிஸ்கஸன் செய்யிறாள். ஒவ்வொரு நாளும். அதைப்பற்றி என்னை ஒரு வரி கேட்கவுமில்லை. அப்பவும் நான் பொறுமையாய் இருந்தன். இண்டைக்கு எனக்குச் சரியான பூட்ஸ் தந்திட்டாள்... தற்ஸ்...ஓல்... விடு கதையை'

என்று முடித்து மெழுகு திரியை ஊதி அணைத்து விட்ட கிருப்ஸ் 'தொம்' என்று மெத்தையில் விழுந்தான்.

'உனக்கு நடந்தது ஒரு தமிழ்ப்பட கதாநாயகனுக்கு நடந்திருந்தால் குறைஞ்சது ஆறு வயலின் பின்னனியில் சோகக்குரல் குடுத்திருக்கும்.'

கிருப்ஸ் சிரிக்கட்டும் என்று இதைச் சொன்னான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெபேட் ஆனல், 'அகிலத் தின்ரை காற்று அப்பிடியே எனக்குள்ளே புகுந்து விட வேணும் எண்டு பேராசைப் பட்டன், இப்ப உயிர் வாழவே காற்றுக் கிடைக்காமல் தவிக் கிறன்...' என்று கூறிய கிருப்ஸ் அழுது விடுவான் போல் இருக்கவே மௌன மாகினன் றெபேட்.

உறக்கத்தைப் போலக் கருணை மிகுந்த ஆறுதலை உலகில் வேறு எங்கும் வேறு எதிலும் பெற முடியாது. ''நல்ல நித்திரை கொள்ளட் டும்'' என்று நினைத்துக் கொண்டு தனது புத்தகத்தை விரித்தான் றெபேட்.

அவன் உறங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் வெளியே 'படபட' வென்று வேட்டுச்சத்தங்கள் முழங்கின. தெரு பெருமளவுக்கு அல்லோல கல்லோலப் படுவது தெரிந்தது.

அக்டோபர் யுத்தத்தின் முதல் அம்பு அது! ஆனல்... இந்த மண்ணில் யுத்தம் எப்போது ஆரம்பித்தது?

83 இலா? 77 இலா? ஐம்பத்தெட்டிலா? இலங்கை சுதந்திர மடைந்த போதா? அல்லது அதற்கும் முன்னரா? விஜயன் வந்த போதா? மனிதன் பிறந்த போதா?

அந்த இரவில்...

தூக்கம் கலந்தது காற்று! தன்னைச் சூழவும் தீமைகள் கண்டது காற்று.

ஆனல் அந்த வெடிகள் எதுவும் கிருப்ஸை எழுப்ப வில்லை. வெளியே நோயுற்றிருக்கும் புறம் அவனது நோயுற்ற அகத்தைப் பாதிக் கவில்லை.

தனக்கும் இந்த யுத்தத் திற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பது போல அவன் உறங்கினன்.

காலையில் வழக்கத்தை விடப் பிந்தியே எழுந்திருந் தான் கிருப்ஸ். மனம் மிகவும் சோர்வுற்றிருந்தது. வெளியே எங்கும் போக மனம் இல்லை. ''விரிவுரைகள் நடக்குமா?'' என்று றெபேட்டைக் கேட் டான்.

''சரியான 'ரென்சன்' யிருக்கு. இந்திய அமைதிப் படைக்கும் பெடியளுக்கும் பிரச்சினை. இண்டைக்கு லெக் சர்ஸ் நடவாது.'' என்று கூறிய றெபேட் மிகவும் வற்புறுத்திய பிறகு குளித்து உடை மாற்றிக் கொண்டு 'சாப்பாட்டு அன்ரி'யின் வீட்டுக்கு வந்தான்.

சற்றுத் தொலைவில் 'ஷெல்' விழுந்து வெடிக் கும் அதிர்வுகள் கேட்ட வண்ணம் இருந்தன.

அன்றும் தோசை தான்.

சாப்பாட்டு அன்ரி தோசை சுடுவது ஒரு சுவா ரசியமான விடயம். 'அன்ரி' வீட்டில் மொத்தம் பதினைந்து பல்கலைக் கழக மாணவர்கள் சாப்பிடுகிருர்கள்.

வழக்கமாக எல்லோருக் கும் காலை எட்டு மணிக்கு விரிவுரைகள் ஆரம்பமாகும் என்பது 'அன்ரி,க்கு வடிவா கவே தெரியும். ஏழரை மணிக்கு ஏறத்தாழப் பதி னைந்து பேரும் 'அன்ரி' வீட் டில் கூடிய பிறகே தோசை சுடத் தொடங்குவாள் அன்ரி

''நான் வெள்ளெனச் சுட்டு வைச்சிருப்பன்; ஆறிப் போம். சுடச்சுடச் சாப்பிட் டால் தான் நல்லா இருக் கும்...''

என்று சொல்லித் தானே சிரித்துக் கொள்வாள். ஒவ் வொரு தோசையாகச் சுட்டுப் பதினைந்து பேருக்கும் வரிசை யாகப் போட்டுக் கொண்டு வருவாள் 'முதல் றவுண்ட்' முடிய ஏழே முக்கால் ஆகி டும். இரண்டாவது றவுண்ட் முடியக் கட்டாயம் எட்டு மணி ஆகிவிடும். மூன் ருவது தோசைக்காக யாரும் காத்திருக்க முடியாது என் பது 'அன்ரி'க்கு நன்ருகவே தெரியும்.

ஆனல் அன்று அப்படி நடக்கவில்லை. வயிறு நிறைந் ததோ இல்லையோ எல்லாரும் மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டு இரண்டாவது தோசையுடன் எழுந்து போய் விடும் நிலை அன்று இருக்க வில்லை.

எல்லாரும் வயிறு நிறைய ஏழெட்டுத் தோசை சாப் பிட்டு எழுந்த பின்பும் கிருப்ஸ் எழுந்திருக்கவில்லை.

''நான் இண்டைக்கு ஒரு இடமும் வர மாட்டேன். நீ போ றெபேட். அன்ரி யிட்டை இன்னும் இரண்டு தோசை வாங்கிச் சாப்பிட் டிட்டுப் போய்ப் படுக்கப் போறன்''

என்று கிருப்ஸ் றெபேட் டிடம் கூறினன். சரியான 'டிப்' அவனுக்கு வந்திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதைப் புரிந்து கொண்ட றொபேட்,

''சரி, நான் ஒருக்கா வெளியிலை போய் நிலைமைகளை அறிஞ்சு கொண்டு வாறன். நீ போய்ப் படு. விசர்த்தனமா வேறை ஏதும் செய்ய யோசிச்சுப் போடாதை'' என்று கூறி வெளியேறினான்.

உள்ளம் வெதும்பி புழுங்கிச் சோரும் நிலையில் வெறும் சடப் பொருள் போல் தோசையைச் சாப்பிட்டான் கிருப்ஸ்.

வெளியே புறப்பட்டுப் போன 'றொபேட்' ஒரு மணி நேரத்துக்கிடையில் திரும்பி வந்தான்.

அடி வயிற்றில் தீச்சட்டி ஒன்று அனல் பறக்க வைத்துக் கட்டியது போல் பதற்றத்துடன் திரும்பி வந்தான்.

அவன் மூலமாகக் கிருப்ஸும் மற்றும் பலரும் பல செய்திகளை அறிந்தனர்.

நகரில் இரண்டு பிரதான பத்திரிகைக் காரியாலயங்கள் குண்டு வைத்துக் தகர்க்கப் பட்டு விட்டன.

விடியற் காலையில் அடுத்தடுத்துக் கேட்ட இரண்டு மூன்று குண்டுச் சத்தங்களின் விளைவு அது!

பத்திரிகைக் காரியாலயத்தில் இருந்த வேலையாட்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்.

'ஜனநாயகம்' பற்றி மிக அதிகமாகவே பேசிக் கொள்பவர்கள் ஏன் இப்படிச் செய்தார்கள் என்பது பற்றியே

# தொடர்கதை

சனங்கள் வீதிகள் தோறும் நின்று கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

'ஏதோ ஒன்று நடக்கப் போகிறது. அதன் ஆரம்பம் இது' என்றான் கிருப்ஸ்.

அவனது சொந்த வேதனை இப்போது அவனிடமிருந்து சற்று விலகினாற் போல இருந்தது.

'நாங்கள் மடிக்குள்ளே கட்டி வைத்த கொடு நாகம் மறைந்திருந்து சீறுகிறது. என்றான் றொபேட்.

'இனி வெளியிலை போறது பயம். வா இரண்டு பேரும் றூமுக்குள்ளை போயிருந்து 'செஸ்' விளையாடுவம்' என்று கிருப்ஸ், றொபேட்டை இழுத்துக் கொண்டு அறைக்குள் புகுந்தான்.

கிருப்ஸ்ஸின் 'கிங்'க்கு றொபேட் இரண்டாம் முறையும் 'செக்' சொன்ன போது அதிக நேரப்பிரிவுக்குப் பின் மேற்கு யன்னலூடாக வந்த காற்று கிருப்ஸ்ஸுடன் நெருங்கி உரிமை கொண்டாடிற்று.

பின்னேரம் மூன்று மணி போல் கோட்டைப்பக்கமாகப் பலத்த வெடிச்சத்தம் கேட்கும் வரை அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

(தொடரும்)

## வத்திக்கான் தூதுவரின் விஜயத்தின் போது . .

மட்/தன்னாமுனை புனிதவளனார் வித்தியாலயத்தில் புனர் அமைப்புப் பகுதியால் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த மாட்சி மிகு பாப்பரசரின் பிரதிநிதியால் 3 - 4 - 89ல் திறக்கப் பட்டது. பங்குத்தந்தை அருட்திரு. அ. அருளானந்தம் அடிகளின் அரும் முயற்சியால் இவ் வைபவம் இடம் பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது. இப்பாடசாலையை ஸ்தாபித்த வண. பெஞ்சின் அடிகளின் பெயர் இம்மண்டபத்திற்கு சூட்டப்பட்டது.

பா. ந. வி. சங்கம், தன்னாமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் இதயம்

"மகனே, மகளே உன்னிதயத்தை எனக்குத்தா"

ஒரு நாட்டின் தென் பகுதியில் ஒரு பௌத்த மடாலயம் இருந்தது. மடாலயபதி வடபகுதியிலே இருந்த மடாலயத்திற்கு ஒரு செய்தி அனுப்பினர்.

நவ சன்னியாசிகளைப் பயிற்றுவிப்பதற்கு நல்லதோர் துறவியை அனுப்பி வைக்கவேண்டுமென்பது அச்செய்தி ஆகும்.

செய்தியை ஏற்ற வடமாநில மடாலயபதி அறிவிலும், ஆற்றலிலும் சிறந்த ஐவரைத் தெரிவு செய்து வழி அனுப்பினர்.

மற்றவர்கள் வியப்புற்றனர். ஒருவர் தானே வேண்டப்பட்டவர். ஏன் ஐவரை அனுப்ப வேண்டும்.? மடாலயபதி இவ்வாறு சொன்னர். "ஐவரில் ஒருவராவது உரிய இடம் சேர வேண்டுமே என்ற நம்பிக்கையிலும் அவாவிலும் அவ்வாறு செய்தேன்."

துறவிகளின் நீண்ட வழிப்பயணம் தொடர்ந்தது. இடையிலே ஒரு கிராமம். அக்கிராமத்துப் பௌத்த துறவி அண்மையிலே இறந்து விட்டார். மக்கள் துறவிகளைச் சூழ்ந்தார்கள், அவர்களில் ஒருவர் கட்டாயம் தங்களுக்குப் பணியாற்ற வேண்டும் என விண்ணப்பித்தார்கள்.

ஒரு துறவி மனமிழகினர். காரணம், வளமான கிராமம்; நதியின் ஊட்டம்; வயல்களின் செழிப்பு; சோலைகளின் தன்மை; நல்ல வருமானம் கிடைக்குமென்ற உறுதிமொழிகள்; துறவியை இழகவைத்தன. இதுவும் சேவை தானே. இவர்களுக்குச் சேவை ஆற்ருவிடின் நான் பௌத்தனல்லனே. துறவி அங்கேயே தங்கி விட்டார்.

எஞ்சிய நால்வர் வழி நடந்தனர். ஓர் அரண்மனை எதிர் கொண்டது. அரசன் துறவிகளை வரவேற்ருன். அரசனின் கவனம் ஒரு துறவியின் மேல் நிலைகுத்தி நின்றது. தன் ஒரே புத்திரியை மணந்து தாங்கள் இந்த நாட்டை ஆள வேண்டுமென்று வேண்டுகோள்விடுத்தான். துறவி சிந்தித்தார். இதுவும் நல்லதுதான், நாட்டு மன்னனுகி நாடு முழுவதற்கும் பௌத்த தருமத்தைப் போதிப்பதற்கு அரியதோர் சந்தர்ப்பம், துறவி அரண்மனையிற் தங்கி விட்டார்.

மூவா வழி நடந்தனர். மலைக்காடு குறுக்கிட்டது. இரவு அண்மித்தது. மலை உச்சியில் ஒரு குடிசை, ஏகாந்தமான குடிசை, அங்கே ஒரு அழகிய இளம் பெண் இவர்களை வரவேற்ருள். விருந்தினர்கள் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைந்தாள். நல்விருந்து சமைத்தாள். அண்மையிலே தான், காட்டுக் கொள்ளையர்கள் அவளது தந்தையைக் கொன்று விட்டனர். இப்போது அவள் வாழ்க்கை தனிமையும் விரக்தியும் கொண்டது. ஒரு துறவி இதையிட்டு ஆலோசித்தார். இரக்கம் காட்ட வேண்டியது ஒருநல்ல பௌத்தரின் கடமை அல்லவோ, அவளை மணந்து அவளுக்கு வாழ்வளிக்க உறுதி கொண்டார். அங்கேயே தங்கிவிட்டார்.

**அருட்சகோ. எஸ். ஏ. ஐ. மத்தியூ, எஸ். எஸ். ஜே.**

இருவர் வழி நடந்தனர். ஒரு நாடு குறுக்கிட்டது. பௌத்த நாடான அதனை இப்பொழுது ஒரு இந்து மன்னன் கைப்பற்றி இருந்தான். பௌத்த மதத்திற்கு எதிராக

# எங்கே இருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மதத்தைப் போதித்தான். பௌத்தத்தைக் காப்பாற்ற வேண்டிய ஒரு நியதி தனக்கு இருப்பதாக இருவரிலே ஒருவர் எண்ணலானர். காரணம் சரியாகவே பட்டது. அந்த நாட்டிலேயே அவர் தங்கி விட்டார்.

எஞ்சிய ஒருவர் தமது குருநாதரின் கட்டளையைச் சிரமேற் கொண்டு தென்பகுதியை அடைந்தார். தமக்கிட்ட பணியினைத் தொடர்ந்தார்.

மீண்டும் இறைவன் பேசட்டும். மகனே! மகளே! உன் இதயத்தை எனக்குத்தா, அதற்கு நான் பதிலளிக்குமுன் அவரே எனக்குச் சொல்லுகிறுர் உனது செல்வம் எங்கேயோ, அங்கேயே உனது இதயமிருக்கிறது.

மேலே குறிப்பிட்ட நான்கு துறவிகளின் இதயம் எங்கே இருந்தது என்பதைப்பார்த்தோம். அவர்களது செல்வம் எங்கே இருக்கிறதோ அங்கேயே அவர்களின் இதயங்கள் தங்கிவிட்டன. ஐந்தாவது மனிதன் தான் இதயத்தை இறைவனுக்கு அளித்தான்.

நமது செல்வம் யாவை?
பட்டியல் தயாரிப்போம்.
ஆட்கள், மனைவி, மக்கள்
உறவினர்கள், நண்பர்கள்
இடங்கள் - ஊர்கள்
தொழில் -
பொருட்கள் - நகைகள் இன்னும்
ஆடம்பரப்பொருட்கள், நூல்கள்
வயல்கள், காணிகள்.

பழைய அனுபவங்கள் - சுவையானவை. எதிர்கால நம்பிக்கைகளும் கனவுகளும்-

இவைஒவ்வொன்ருக எடுத்து அவற்றுக்கு நைவேத்தியஞ் செய்து ஆண்டவன் முன் வைக்கின்றேன்.

இவற்றை எப்படி நான் அவருக்குக் கொடுப்பது?

கடந்த காலத்தைப்பொறுத்த வரை என்னுடைய இதயம் விரும்பிய செல்வங்கள் இறந்தவை. அழிந்தவை.

வாழ்வு நிகழ் காலத்துக்குரியது. கடந்த காலக்கனவுகளுக்கு விடை கொடுப்போம் குட்பை (good-bye) சொல்லுங்கள் மனதிலே பெருஞ்சுமை நீங்கி விடுகிறது. இதயம் விடுதலை பெறுகின்றது.

என்னிதயம் எதிர்காலத்தைப் பொறுத்த வரை கடவுளின் சித்தம் நிறைவேறட்டும் என்று சொல்லட்டும்.

என் எதிர்காலக்கனவுகள் இலட்சியங்கள் கற்பனையோடு கூடியவை.

கற்பனையில் இதயத்தைப் பறிகொடுக்காமல் நிகழ்கால இதயத்தை அதன் செல்வங்களை ஆண்டவனுக்குக் கொடுப்போம்.

என் இதயத்தை நான் மீட்டெடுக்க வேண்டும் - சுதந்திரமடைய வேண்டும்.

நான் நேசிக்கும் ஒவ்வொரு வரையும் பார்த்துச் சொல்லுகிறேன்.

"நீ என் வாழ்க்கைக்கு மிகவும் அவசியந்தான். ஆனுல் நீ என் வாழ்க்கையல்ல.

எனக்கு ஒரு வாழ்வு உண்டு.

எதிர் கொள்ள வேண்டிய முடிவு ஒன்று உண்டு, அது உன்னிலிருந்து வேருனது.

பொருட்களைப்பற்றியும் இதையே நான் சொல்லுவேன். என் சுகம், என் அழகு என் இலட்சியம், நான் உழைத்த என்நல்ல பெயர், புகழ் இவற்றுக்கும், நீ என் வாழ்க்கைக்கு மிகவும் அவசியம் தான், ஆனுல் நீ என் வாழ்க்கை அல்ல" இறுதியாக ஆண்டவனின் முன் நிற்கின்றேன். தனியாக - இதுதான் தனிமை.

இப்போது நான் சொல்லுகிறேன். ஆண்டவரே நீர்தான் என் வாழ்க்கை. நீர்தான் என் முடிவு.

இப்பொழுது எனக்குத்தெளிவாக விளங்குகிறது. "நானே வழி, நானே உண்மை, நானே வாழ்வு" நம் கடவுள் பொல்லாதவர். சாதாரண வார்த்தைகளிற் கூறுவதானுல்,

'பொறுமைக் கடவுள்' எனலாம்.

"என்னை விட தாயையாவது தந்தையையாவது பிறரையாவது நேசிப்பவன் என் இராட்சியத்திற்கு உகந்தவனல்லன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாவல் வளர்ச்சியில் கிறிஸ்தவர்கள்

— டாக்டர் கிரேஸ் தேவராஜ் —

நாவல் என்பது காலம் உருவாக்கிய இலக்கியக் கலை வடிவம். செல்வாக்குப் பெற்று வரும் நாவல் இலக்கிய வளர்ச்சியில், கிறிஸ்தவம் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழில் தனி உரை நடை இல்லை என்ற குறையைப் போக்கி, அறிவியல் சார்ந்த நூல்களும், பயபக்தியுடன் கூடிய சமய நூல்களும் எழுதப்பட்டு வந்த காலகட்டத்தில், வீரமாமுனிவர் புதுமையான ஓர் உரை நடையாகப் 'பரமார்த்த குரு கதை' என்னும் உரை நடை நூலை இயற்றினர். பரமார்த்த குரு கதை வெளியிட்ட போதே, கிறிஸ்தவ தமிழ் நாவல் இலக்கியத்தின் விதை ஊன்றப்பட்டு விட்டதெனலாம்.

1862 ம் ஆண்டு உவின்ஸ்லோ பாதிரியார், தமது அகராதி நூல் முன்னுரையில், 'சுதேசிகள்' பிழையின்றி ஒரு பக்க வசனம் கூட எழுத மாட்டாதவராய் உள்ளனர். என்று எழுதி உள்ளார். இதை அறிந்தோ அறியாமலோ 1882 ம் ஆண்டு வீரமா முனிவர் வெளியிட்ட பரமார்த்த குருகதை, உரை நடையில் தோன்றிய முதல் புதுமைப் படைப்பாய், கல்வி இல்லாதாரும் கேட்டு இன்புறத் தக்க வகையில் எழுதப்பட்டிருந்தது. படிப்போரைச் சிரிக்கவைக்கும் வேடிக்கைக் கதையாகவே பரமார்த்த குரு கதை' அமைந்திருந்தது. உரை நடையின் எல்லையை இவ்வாறு விரிவு படுத்தி எழுதிய வீரமா முனிவர், நகைச்சுவை நாவல் எழுத்தாளர்களின் முன்னேடியாக விளங்குகிறுர்.

1887ம் ஆண்டு ஜி. பெடால் என்பவர் எழுதிய ஜெர்மானியக் கதையை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் புஷ்பக் கூடை என்ற பெயரில் மொழி பெயர்ந்து வெளியிட்டது.

1879ம் ஆண்டு மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் நூலே, இலக்கிய வரலாற்று அறிஞர்கள் ஒப்புக் கொண்ட தமிழின் முதல் நாவலாகும்.

இது முற்றிலும் உண்மையேயாயினும், இதற்கு முன் வெளிவந்த பரமார்த்த குரு கதை, புஷ்பக்கூடை, ஆகியவற்றின் சிறப்பையும் நாம் மறந்துவிடக் கூடாது

எவ்வாறேனும் தமிழ் நாவல் கலைக்கு வித்திட்டவரும், முதல் நாவலைத் தோற்வித்தவரும் கிறிஸ்துவப் பேரறிஞர்களே என்பது பெருமைக்குரிய சிறப்பான செய்தியாகும்.

1896 ம் ஆண்டுக்குப் பின்னர் வெளிவந்த கிறிஸ்தவ நாவல்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ சமயத் தத்துவங்களைக் கூறுவனவாக அமைந்தன. ஏறத்தாழ 1915ம் ஆண்டு வரை இந்நிலையே நீடித்தது.

1965ம் ஆண்டுக்குப் பின்னர், கிறிஸ்தவ நாவல்களின் போக்கிலே புதிய திருப்பங்களைக் காண முடிகிறது. சமயக் கொள்கைகள், சமயம் மாறும் நிகழ்ச்சிகள், அதன் விளைவுகள் போன்ற பின்னணிகள் மாறி, சமுதாய வளர்ச்சியே பெரும்பாலும் பின்னணியாக அமையத்தொடங்கியது. ஹெப்சிபா யேசுதாஸ், எழுதிய புத்தம் வீடு, டாக்டர் செல்லப்பா போன்ற நாவல்கள் இந்த வகையில் குறிப்பிடத் தக்கவை.

1966ம் ஆண்டு வெளிவந்த டி. செல்வராஜின் நாவல்கள் புதியதொரு திருப்பமாக விவசாயிகளின் உரிமைக் குரலாகவும், தொழிலாளர்களின் எழுச்சிப் போராட்டங்களையும், விளக்குவதாக எழுதப்பட்டுள்ளது. 'மலரும் சருகும்' போன்ற நாவல்கள் இவ்வாறு அமைந்தவை.

இன்னும் பல கிறித்தவ எழுத்தாளர்கள் தமிழ் நாவல் இலக்கியத்துக்கு உரமூட்டி வந்துள்ளனர் - வருகின்றனர்.

முதல் நாவலைத் தமிழுக்கு அளித்த பெருமையுடன் கிறிஸ்தவம் ஒதுங்கிவிடாது சமுதாய மாற்றங்களுடனும், இலக்கிய வளர்ச்சியுடனும் ஒன்றி நாவல்களைப் படைத்து வந்திருப்பது போற்றற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாவண்யம்

ஆசிரியர்: தேவதாஸ் ஜெயசிங்

விவிலியத்திலே போற்றப்படும் நீதி பதிகளிலே பெரும் வீரனுக் கருதப்படும் சாம் சனின் வாழ்வை மையமாக வைத்து 'லாவண்யம்' என்ற இச்சிறு நாவல் எழுதப் பட்டுள்ளது. மனோவா என்பவனும் அவன் மனைவியும் குழந்தைப் பேறு அற்றிருந்தாலும் இறைவனின் அநுக்கிரகத்தால் பெற்றெடுக் கும் குழந்தைதான் சாம்சன். சாம்சன் இறை வனுக்கே அர்ப்பணிக்கப்பட்டவன் என்பதைக் காட்ட அவன் தலையிலே சவரக் கத்தி படாமலே வளர்க்கப்பட்டான். இஸ்ராயேல் மக்களின் (யாக்கோபினரின்) பரம எதிரிகளாக இருந்த பிலிஸ்தியரை முறியடிப்பதுதான் சாம்சனுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட பணியாக இருந்தது. போர்த்தந்திரங்களி னாலோ, ஆயுத பலத்தினாலோ அவனை எதிர்க்க முடியாதென்றறிந்த பிலிஸ்தியர் அவனது பலவீனத்தைச் சாதகமாகக் கொண்டு அவன் தொடர்பு வைத்திருந்த பெண்ணின் துணை யுடன அவனைச் சிறைப்பிடிக்கின்றனர். தான் ஒரு பெண்ணால் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த சாம்சன், மனம் வருந்தி, தவறுக்கு ஈடு செய்ய தான் இறக்கும் போதே பல்லாயிரம் பிலிஸ்தியரையும் கொன்று இறப்பிலே ஒரு வீர காவியம் படைக்கின்றான்.

விவிலியத்திலே இது ஒரு சிறு நிகழ்ச்சி. ஆயின் இந்நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு, கற்பனைத் திறனைத் தாராளமாகப் பயன் படுத்தி இச்சிறு நாவலைப் படைத்துள்ளார். சாம்சனின் வாழ்வை வீர காவியமாகப் படைக்க விரும்பிய ஆசிரியர், ஒன்பது அத்தி யாயங்களாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் பொருத்தமான தலைப்புக்களைக் கொடுத்து விறு விறுப்புடன் கதையோட்டத்தைக் கொண்டு சென்றிருக்கிறார் திருக்குறள், பழமொழிகள், ஆன்றோரின் அநுபவ மொழிகள், திருமறை நூல் எனபவற்றிலிருந்து எடுத்துக்காட்டுக் களை முன்வைத்து இடையிடையே குட்டிப் பிரசங்கமும் செய்திருக்கிறார். விவிலியத்தை அறிந்தவர்கள் இதனைப் படிக்கும்போது புது மையை உணரக் கூடியதாகவும், விவிலியத்தை அறியாதவர்கள் படிக்கும்போது சிறு நாவலை வாசித்த பெருமிதத்தை அடையக்கூடியதாக வும் இச்சிறு நாவல் படைக்கப்பட்டுள்ளது. அட்டைப்படம் சினிமா விளம்பரம் போன்று கவர்ச்சியாகவும், வாசகர்களை வாசிக்கத் தூண்டக்கூடியதாகவும் அமைந்துள்ளது. 75 பக்கங்களைக் கொண்ட இந்நாவலின் விலை ரூ 25/- ஆக இருப்பது பொருத்தமானதாகும். பெறவிரும்புவோர்:-

57, மகிந்த பிளேஸ், கொழும்பு - 6 என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

அருள்திரு பி. ஜோசப்

## ஒரு நோக்கு

தந்தி முறையைக் கண்டு பிடித்த சாமுவேல் மோர்ஸ் மிக ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். எனவே, பள்ளியில் படிக்கும் போதே பிறரது உருவப் படங்களை வரைந்து கொடுத்துப் பணம் சேர்த்து வந்தார். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை புகைப் படக் கெமரா வசதி அவ்வளவாக இல்லை. எனவே எல்லோருக்குமே தங்கள் உருவத்தை வரைந்து வைக்க வேண்டும் என்ற ஆவல் இருந்ததால், இவரால் பணம் சேர்த்துக் கல்லூரியில் சேரவும் முடிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பும் கலையும்

க. யோகநாதன் B. A. (Hons)

மனிதனை விலங்குகளில் இருந்து வேறு படுத்திக்காட்டும் அம்சங்கள் அனைத்திற்கும் அடிப்படை ஆதாரமாக அமைவது அவனின் உழைப்பும் அதன் ஈட்டங்களுமே ஆகும். காட்டு மிராண்டி நிலையில் வாழ்ந்த மனிதனின் ஆதி மூதாதை தனது இருகரங்களையும் உழைப்புக் கருவியாக்கிய உயிரியல் பாய்ச்சலே அவனை விலங்கு நிலையில் இருந்து வேறுபடுக்தி வளரச் செய்யலாயிற்று. இன்றைய உலகின் நவீன அற்புதங்கள் என வியக்கும் சகலதிற்குமே சூத்திரதாரி மனித உழைப்பே ஆகும். இன்றைய உலகில் மனித உழைப்பை விலத்தி வைத்து வீட்டு ஒரு கணத்தைத்தானும் கற்பனை பண்ண முடியாது.

''சகல செல்வத்தினுடைய தோற்று வாயும் உழைப்பே என அரசியல், பொருளியல் வாதிகள் அறைந்து கூறுகின்றனர். உண்மையிலே அதுதான் தோற்றுவாய் - இயற்கைக்கு அடுத்தபடியாக, அதற்கு இயற்கை மூலாதாரமாக வழங்கும் பொருளை அது செல்வமாக மாற்றுகிறது. ஆனால் அளவிடற்கரிய ரீதியில் அதை விட அது இன்னும் அதிகமும் கூட ஓர் அர்த்தத்தில், உழைப்பு மனிதனையே சிருஷ்டித்தது என்று நாம் கூற வேண்டிய அளவுக்கு அது மானுட வாழ்வு முழுவதற்கும் முதன்மையான அடிப்படை நிபந்தனையாக உள்ளது''

''உழைப்பிலிருந்தும் அதனுடைய மாற்றப் போக்கிலிருந்தும் மொழியின் பிறப்பை விளக்குவது ஒன்றே சாலவும் பொருத்தமுடையது என மிருகங்களுடன் ஒப்பிட்டு நோக்குங்கால் நிருபிக்கப்படுகிறது.''

''மனிதக்குரங்கிலிருந்து மனிதனுக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்'' என்ற தனது நூலில் பிரெடெரிக் ஏங்கெல்ஸ் அவர்கள் கூறியவை தான் மேலே உள்ள மேற்கோள்கள் மனிதனை விலங்கில் இருந்து விடுவித்து அவனை மனிதனுக்குவதிலும் அவன் ஈட்டங்களை விளக்குவதிலும் ''உழைப்பு'' பெறும் முக்கியத்துவத்தை மேற்படி மேற்கோள்கள் உணர்த்துகின்றன எனலாம். இவ் அடிப்படை உண்மையில் நின்றே உலகில் கலைகளினது தோற்றத்தையும் வளர்ச்சியையும் நாம் காண வேண்டியவர்கள் ஆகுகின்றோம்.

## கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும் :-

கலை வடிவங்களை நாம் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. கண்களால் கண்டு சுவைக்கும் கலை வடிவங்கள். உ+ம் ஓவியம், சிற்பம் போன்றவை.

2. செவியினுல் கேட்டு இன்புறும் கலை வடிவங்கள் உ+ம் : மேள, தாள வாத்தியக் கருவிகளினதும் ஏனைய இசைக்கருவிகளினது இசைகளும் வாய்ப்பாட்டும் போன்றவை.

3. எழுத்தினுல் வடிவம் பெற்ற இலக்கியக் கலைகள் உ+ம் : புனைகதைகள், கவிதைகள் ஆகிய எழுத்திலக்கியங்கள் போன்றவை.

4. பல்வேறு கலை வடிவங்களையும் இணைத்த கலைவடிவங்கள். உ+ம் : நடனம், ஒப்பரா, நாடகம், சினிமா போன்றவை.

மேலே கூறப்பட்ட கலைகள் எதுவாக இருப்பினும் இவைகளின் ஊற்று மூலமாக அமைவதுமனிதர்களின்உலகியல் வாழ்க்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். கலைகள் என்பதின் அடிப்படை விதி அது, மனிதனால் ஆக்கப்படுவதே ஆகும். அதாவது மனித உழைப்பே கலைகள் பிறக்கக் காரணம். கலைகளில் நாம் அழகைக் கண்டு இரசிக்கின்றோம். கலைகளில் இந்த அழகை அமைத்துத் தருவது மனிதனின் உழைப்பே ஆகும். ஆகக் கலையின் அழகு என்பது மனிதனால் ஆக்கப்பட்ட அழகு என் பது உண்மையாகும். மனிதனால் ஆக்கப் படாத அழகு கலையழகு அல்ல. உதாரண மாக மாலை வானம் மனதைக் கவரும் அழகு கொண்டது. அது போல் அம்மாலை வானம் பற்றிய கவிதையும் மனதைக் கவரக் கூடியது. இதன்வாறு ஒருவனை மாலை வான அழகும் கவர்கின்றது. அதேபொழுது அம்மாலை வானம் பற்றிய கவிதையும் அவனைக் கவர் கின்றது. ஆக இரண்டிலுமே அழகு உண்டு. ஆயின் இயற்கை அழகு என்றால் அது பற்றிய கவிதை கலையழகாகும். கவிதையின் கலையழ கிற்கு மூலம் மாலை வானம் ஆயினும், கவிதை யில் காணப்படும் கலையழகிற்குக் காரணம் கவிஞனின் அநுபவ உழைப்பே ஆகும். இதே போன்றே சிற்பம், ஓவியம் போன்ற ஏனைய கலைகளுக்கும் மனித உழைப்பிற்கும் (முயற்சிக் கும்) இடையில் உள்ள உறவை நாம் கண்டு கொள்ள முடியும். சுருக்கமாகக் கூறுவதாயின் கலைகள் மனித உழைப்பின் விளைபொருள்கள் எனலாம். இவ்வாறு கலைகள் மனித உழைப் பின் விளைபொருளாக இருப்பதால் தான் மனிதனின் உழைப்போடு கலைகள் பிறந்து அதன் வளர்ச்சியோடு அவையும் வளர்ந்து வந்துள்ளது.

மனிதனின் ஆதி உழைப்பைக்காண நாம் மனிதனின் நாகரீக வளர்ச்சியின் ஆரம்பப் படியாக அமைந்த வேட்டைக் காலத்திற்குச் செல்லல் வேண்டும்.

வேட்டைக்கால மனிதன் மிருகங்களில் இருந்து பெரிதும் வேறுபடாதவன். அவன் கூட்டமாக வாழ்ந்தான். கூட்டமாகவே (வேட்டையாடி) உழைத்தான். கூட்டமாக உண்டான். கூட்டமாக மகிழ்ந்தான். கூட்ட மாகவே துன்பத்தையும் சந்தித்தான். இவ் வாறு கூட்டாக வாழ்ந்த ஆதி மனிதன்

**வருடம் செல்லச் செல்ல தோலில் சுருக்கம் விழும். அதே அளவிற்கு இதயத் திலும் சுருக்கம் விழ எட்டிப்பார்க்கும். இதயத்தில் சுருக்கம் விழுந்துவிடாமல் இருக்க எப்போதும் ஆர்வத்துடன் செய லாற்றிக் கொண்டே இருங்கள்.**

தனது கூட்டு உழைப்பின் வெற்றியால் (வேட்டையின் வெற்றியில்) மனம் மகிழ்ந் தான். அதாவது வேட்டையில் மிருகத்தை வீழ்த்தியதும் அவனுக்கு உற்சாகம் ஏற்பட் டது. இந்த வேட்டை கிடைத்த மகிழ்ச்சியில் வேட்டைப் பொருளை நெருப்பில் இட்டு தனது மனதின் இயல்பான மன எழுச்சிக்கு இணங்க வேட்டைப் பொருளைச் சுற்றி ஆதி மனிதன் குரல்களை எழுப்பியும் கை, கால்களை ஆட்டியும், உதைத்தும், துள்ளியும் ஆடினான். இந்த ஆட்டமும், கூச்சலும், குதிப்புமே பிற் காலத்தின் பாட்டும், கூத்தும் ஆகிற்று. ஆக கலையும், உழைப்பும் கலந்து தோன்றி யதை இங்கு நாம் காண்கின்றோம். கூட்டு உழைப்பில் இருந்து கூட்டுக்கலை பிறக்கின்றது. தொன்மைமிக்க கலைவடிவங்களில் கூட்டுத் தன்மை காணப்படுவதற்குக் காரணம் அவை கூட்டுஉழைப்பில்இருந்து பிறந்தமையேஆகும். இன்றும் கூட நாகரீகம் பெரிதும் எட்டாத சமூகங்களில் பல தொழில்கள் கூட்டாக செயற் படுத்தப்படுவதோடு அச்சந்தர்ப்பங்களில் கலை களும் கூட்டுத்தன்மையோடு வெளிப்பாடு அடைவதைக்காண முடியும். உ+மாக கிழக் கின் கிராமப்புறங்களில் காணப்படும் நாட்டார் பாடல்கள் சிலதில் (தொழிற் பாடல்களில்) நாம் இந்தக் கூட்டுத் தன்மையைக் காண முடியும்.

மனிதனின் ஆதிகாலம் ஆகிய வேட்டைக் காலத்தில் கலைகள் மனிதனிடம் அரும்பு வதை மேலே நாம் கண்டோம். இதனை நாம் பின்வருமாறு வரையறை செய்து கொள்ள முடியும். மனிதனின் புறத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் உழைப்பின் வெற்றியோடு மனிதனின் அகத்தேவைகளுக்குத் தீனியாக அமையும் கலைகளும் தோன்றுகின்றன'' என்பதே அவ்வரையறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மனிதனின் புறத் தேவையைப் பூர்த்தி செய்யும் முயற்சிகளில் இருந்தே அவனின் அகத்தேவையைப் பூர்த்தி செய்யும் கலைகள் பிறந்தன வளர்ந்தன என்பதற்கு சாட்சியாக நாம் பல ஆதாரங்களைக் காணமுடியும்.

மனிதனுல் ஆக்கப்பட்ட இசைக் கருவிகளான தோற்கருவிகளும், நரம்புக் கருவிகளும் மனிதனது வேட்டைப் பொருட்களான மிருகங்களில்இருந்துபெறப்பட்டவையே ஆகும். இந்து மதத்தின் ஆயர் பாடிக்கண்ணன் மாடுமேய்த்ததும் அவன் கையில் இருந்ததாகக் கூறப்படும் புல்லாங்குழலும் கூட உழைப்பிற்கும் கலைக்கும் இடையிலான தொடர்பையே காட்டி நிற்கின்றது. எனலாம்.

மட்பாண்ட புனைவு அறிவு வளர்ச்சியின் விளைவே கர்நாடக சங்கீதத்தின் 'கடம், எனும் வாத்தியக் கருவியாகும்.

இன்றய எலக்ட்ரோனிக், கம்பியூட்டர் கண்டு பிடிப்புக்களே பல வாத்தியக் கருவிகளின் கண்டு பிடிப்பிற்கும் காரணம் ஆகி நிற்கின்றன. இந்த வகையில் சினிமாக் கலையையும் நாம் குறிப்பிடலாம். நவீன விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களும் அவை தொடர்பான உற்பத்திகளும் இல்லாமல் சினிமாக் கலை சாத்தியமாகி இருக்க முடியுமா? இதே போல் உற்பத்திக் கருவிகளின் கண்டு பிடிப்பும் வளர்ச்சியும் இன்றி (உலோகங்களின் கண்டு பிடிப்பும் அவற்றைக் கொண்டு கருவிகள் ஆக்கும் அறிவு) சிற்பக்கலையைச் சிந்திக்கத்தான் முடியுமா?

இதனைக் கொண்டு மனிதனது புறத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்தித் துறைகளின் வளர்ச்சியோடே அவனது அகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கலை முறைகளும் வளர்ந்து உள்ளன என்பதை நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

வேறொரு வகையிலும் நாம் உழைப்பிற்கும் கலைக்கும் இடையிலான தொடர்பை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

உற்பத்திக்குப் பயன்படும் உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சி உற்பத்திக் துறையில் மாற்றத்தைக் கொண்டு வரும். இந்த மாற்றம் சமுதாய வாழ்க்கையிலும் மாற்றத்தைக் கொண்டுவரும் இது ஒரு சமுதாயவிதி. உ+மாக உலோக கண்டு பிடிப்பும் அதைக் கொண்டு 'ஏர் முதலாய கருவிகளை மனிதன் செய்யக் கற்றுக் கொண்டமையும் விவசாயத் துறையை வளர்ச்சி அடையச் செய்கிறது. இந்த விவசாய உற்பத்தி முறை வளர்ச்சி மனிதனை இடையருத உணவுப் போராட்டத்தில் இருந்து விடுவிக்கின்றது. இதனுல் மனிதனுக்கு வாழ்க்கையில்ஓய்வு நேரம் கிடைக்கின்றது. இந்த ஓய்வு மனிதனைக் கலைகள் பால் ஈடுபட அவகாசத்தை அளிக்கின்றது. இதனுல் கலைகள் வளர்கின்றது.

மனிதனது புறத்தேவைகளை பூர்த்தி செய்யும் முயற்சிகளில் (உழைப்பில்) மனிதன் பெறும் முன்னேற்றமும், அநுபவப் பயிற்சிகளுமே கலை முயற்சிகளுக்கு பயிற்சிக்களமாக அமைகின்றன என்பதை இதுவரை கண்டோம். உதாரணமாக சேலைகள், தளபாடங்கள் பிற நுகர் பண்டங்களை உற்பத்தி செய்வதில் மனிதன் பெற்ற அறிவும் பயிற்சியுமே மனிதனது அகத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் கலைகள் தொடர்பான அறிவிற்கும், பயிற்சிக்கும் களமாக அமைகின்றன. இந்த அடிப்படையில் அறிஞர்கள் கலைகளை இருவகையாகப் பாகு படுத்தலாம் என்பார்கள்.

1. பயன்படு கலைகள்
2. நுண்கலைகள்

✻

பித்த வெடிப்பு கால் பாதங்களின் ஓரங்களில் வரும் தோல் வெடித்து நடக்க முடியாமல் செய்யும். இதற்கு, இரவு படுக்கப் போகும் போது கிளிசரினைப் பித்த வெடிப்பில் தடவிக் காண்டு படுத்தால் வெடிப்புத் தொந்தரவு கொடுக்காது. இதற்கு சுத்தமான நெயில் பொலிஷும் நல்ல மருந்தாகும். மருதாணியையும் அரைத்துப் பூசலாம்.

✻



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் புறத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் நுகர் பண்ட உற்பத்திக்குத் தேவைப்படும் கலைகளே பயன்படுகலைகள் எனப்படும். மனிதனின் அகத்தேவைகளைப் பூர்த்திசெய்யும்கலைகளையேநுண்கலைகள்என்பர். ஓவியம், சிற்பம், கூத்து, நடனம், சங்கீதம் போன்றவை நுண்கலைகளுக்குள் அடங்கும். நுண்கலைகள் மனித உணர்வுகளோடு ஒட்டியவை. பயன்படு கலைகள் அன்றாடம் நாம் காணும் நுகர் பண்டங்களோடு, பண்ட உற்பத்தியோடு தொடர்புடையவை. இந்தப் பயன்படுகலைகளில் மனிதன் பெற்ற வெற்றியும், வளர்ச்சியுமே மனிதனது நுண்கலைகளின் வளர்ச்சிக்கு அத்திவாரம். எனவே தான் ''மனித உழைப்பு'' இல்லாமல் கலைகள் இல்லை என்பது மாபெரும் உண்மை ஆகுகின்றது.

இதுவரை நாம் பார்த்தவைகளுக்கு இணங்க கலைகளுக்கும் உழைப்பிற்கும் இடையிலான உறவைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. மனிதனது புறத்தேவைகளைப் பூர்த்தி செய்ய என்றுமனிதன் உழைப்பைப் பயன்படுத்துகின்றனே. (பொறுக்கித் தின்ற வாழ்க்கையில் இருந்து உற்பத்தி செய்து வாழும் வாழ்க்கைக்கு மாறுகின்றனே) அன்றே கலைகளும் பிறக்கின்றன.

2. புறத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் மனிதனது உற்பத்தி முயற்சிகளின் வளர்ச்சி மனிதனுக்கு ஓய்வு நேரத்தைக் கொடுக்க அவ் ஓய்வு நேரங்கள் மனிதனைக் கலைகள் பால் ஈடுபடச் செய்து கலைகளை வளர்க்கும் சூழலை மனிதனுக்கு ஏற்படுத்துகின்றது.

3. மனிதனது புறத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்தித் துறைகளின் வளர்ச்சி அவனது அகத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் கலைகளின் வளர்ச்சிக்கும் காரணம் ஆகுகின்றது

## ''முத்தாரம்'' இசைமன்றம் புனரமைப்பு

கிண்ணியடி இளைஞர்களின் முயற்சியின் பலனாக, ''முத்தாரம்'' இசைமன்றம் மீண்டும் புனரமைக்கப்பட்டது. இம்மன்றம் இசைக்கலையில் ஆர்வமுள்ள இளைஞர்களின் இடைவிடாத முயற்சிகளால் பல சிறிய இசை நிகழ்ச்சிகளை ஏற்கனவே நடப்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வன்செயல்களின்போது, இந்த இசைக்குழுவினரிடம் இருந்த பல இசைக்கருவிகள் நாசமாக்கப்பட்டது குறித்து, கலாச்சார அமைச்சு இசைக்கருவிகளுக்கான நிவாரணம் ஒன்றை அளிப்பதற்கு முன்வந்தமையின் காரணமாக, இம்மன்றம் மீண்டும் உயர் நிலைக்கு கொண்டுவருவதன் நோக்கமாக பொதுமக்களின் முன்னிலையில் கூட்டம் நடத்தப்பட்டது. பல இளைஞர்கள் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டனர். இந்த இசைக்குழுவின் பிரதம ஆலோசகராக இசைக்கலைஞர் என் . கே . தயாளகுணசீலன் பொறுப்பேற்றுள்ளார்.

— தகவல்: கலைப்பித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலாயிரம்!

செ. குணரெத்தினம்

கர்த்தரே, எனையாளும்
காவலரே, இம்மண்ணில்
ஹர்த்தாலில், றவுண்டப்பில்
குண்டு வெடிப் பயங்கரத்தில்
வர்க்கயினப் போராட்ட
வன்முறையில் யாமடைந்த
துர்ப்பாக்கிய நிலையை
துப்பாக்கிகளேயறியும்!

வீட்டுக்கு வீடிருக்கும்
வாசற் படிகளைப் போல்
வீட்டுக்கு வீடு துன்பம்
விளையாத வீடு எது?
நாட்டுக்குள் பலபேர்கள்
நாலாயிரம் எடுக்க
காட்டுக் குரங்குகள் போல்
கர்த்தரே நாம் சிலபேர்!

வன்செயலால் பாதிப்பு
வலுவாக அடைந்தவரில்
என் பெயரைச் சேர்க்காமல்
ஏன் விட்டார் தெரியவில்லை;
அன்று புயல் அடித்தபோது
அனைவருக்கும் நிவாரணத்தை
தின்றாலும்; சரிசமமாய்
தந்துதவி பண்ணினரே!


என்ன கணக்கெடுப்போ
எனக்குப் புரியவில்லை;
'கண்கெட்ட கணக்கெடுப்பாம்'
கதைக்கிறார் பலர் வெளியே!
பின்ன என்ன ஊரிலுள்ள
பணக்காரர் சில பலபேர்
கன்னமிடுதலைப் போல்
காசெடுத்துப் போனரே!

ஆலையிலே வேலை செய்யும்
அமலதாஸ்; என் நிலையை
மேலிருக்கும் கர்த்தரே நீர்
மிக நன்றாய் அறிந்திருப்பீர்!
கூலிவேலை; ஹர்த்தாலில்
கொமாண்டோக்கள் றவுண்டப்பில்
வேலையின்றி வீட்டில் நின்ற
வேதனமே இன்னுமில்லை!

பாப்பாசி மரத்தினிலே
பலகை அறுத்தாலும்
இப்பாரில் நாமடைந்த
இடர், துன்பம், பாதிப்பை
எப்படியும் இப்பணத்தில்
ஈடுசெய்ய முடியாது
அப்பப்பா இதுவுமொரு
அநியாய இழப்புத்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுடர் விடும் தீபங்கள்

அன்று பிரான்ஸ் தேசத்திலே சீரும். சிறப்பும், அறிவும், திருவும் பொங்கும் நாத் தெஸ் நகரத்தில், 1839ம் ஆண்டு வைகாசித் திங்கள் 21ம் நாள் ஹெலன் பிறந்தாள். தந்தை சால்ஸ் டெஷபோடன். தாய் சோபி கால்பர்டுவுக்கும் இவள் அருமை மகள்.

'இளமையும், இன்பமும் இறைவனுக்கே'

''அன்புப் பணி செய்து கிடப்பதே அடியார்க்கு இன்பம்'' என்னும் சீரிய நோக்குடையவள் ஹெலேனு. இவள் தான் இன்று பாடுகளின் மரித் தாயார் எனப் பாரதமக்கள் பாராட்டி நிற்கும் தாய். பாரத நாட்டின் ஊட்டி என்னும் நகர மக்களைத் தன் மக்களாக அரவணைத்த அன்னை. தன் வாழ்வு, இளமை, செல்வம், அனைத்தையும் வீரமுடன் துறந்தாள். பாரதத்தின் பல பகுதி மக்களையும் தரிசித்தாள். இவள் பரப்பிய கன்னியர் சபையே மரியாயின் பிரான்சீஸ்கன் கன்னியர் சபையாகும். இன்று 19ம் நூற்றுண்டிலே எம் லங்காவில் 20 இடங்களிலும் உலகின் ஐந்து கண்டங்களிலும் 76 நாடுகளிலும் இறை வார்த்தையின் தீபங்களாக மக்கள் மத்தியில் ஒளி வீசுகின்றனர். 1877ம் ஆண்டு தைத் திங்கள் 6ம் நாள் மரியாயின் பிரான்சீஸ்கன் சபை எம் பாரதப் பூமியிலே உதயமாயிற்று. இன்று அன்னையின் 150ம் ஆண்டு நிறைவு. எம் சபையானது புனித பிரான்ஸ்குவின் ஏழ்மையை அரவணைத்து இறைமகன் யேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழ்வதுமன்றி, மானிட மீட்புக்காகத் தன் மகனை எமக்களித்த ''இதோ உமது அடிமை'' என்னும் விருதின் கொடியேந்தி வாழும் எம் அன்னையின் அர்ப்பண வாழ்வினையும் தியாக மனப் பான்மையுடன் வாழ முனைகின்றனர்.

உன் அன்பையும் அரவணைப்பையும், உன் சேவையையும். சிறப்பையும்,உன் பெருமையையும்.பொறுமையையும். உன்தீரத்தையும் வீரத்தையும், உன்கனிவையும். கண்காணிப்பையும் எதிர் நோக்கி நிற்கும் மக்கள் யார்? கடவுளை அறிந்தும் அறியாதோர். கல்வி அறிவற்றோர், பெற்றோர், உற்றோர் அற்றவர் உடல். உளநோய்வாய்ப்பட்டோர். சமூகம் தள்ளிடும் குஷ்டம் நிறைந்தவர்கள். இவர்கள் அனைவருக்கும் அன்பின் தாயாக, அணைக்கும் சகோதரமாக, அருளின் வடிவாக, அமைதியின் கருவியாக, ஒளியின் சின்னமாக உன் சேவையைப் பரப்பு. ஆண்டவரின் தோட்டத்தின் ஊழியக்காரியாகு. உன் வாழ்வு மலரும். ஆண்டவரும் அகமகிழ்வார்.

---

வருடம் செல்லச் செல்லத் தோலில் சுருக்கம் விழும். அதே அளவிற்கு இதயத்திலும் சுருக்கம் விழ எட்டிப் பார்க்கும். இதயத்தில் சுருக்கம் விழுந்துவிடாமல் இருக்க எப்போதும் ஆர்வத்துடன் செயலாற்றிக் கொண்டே இருங்கள்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அர்ப்பண வாழ்வின் மையம் ''நற்கருணை, நாதராவார். அவர் முன் தன்னை அர்ப்பணமாக்கி அவரோடு நெருங்கிய உறவு கொண்டு'' தான் பெற்ற இன்பத்தை இவ் வையகம் பெறுக'' என வாழ்ந்து மக்களோடு மக்களாக, இரண்டறக் கலந்து இறை மகன் யேசுவின் சாட்சிகளாக எளிய வாழ்க்கை நடாத்துகின்றோம். திரு வழிபாட்டில் பங்கு கொள்ளல். ஒரு மணி நேரத்தியானம், அரை மணி நேர ஆராதனை, இவையே எம் வாழ்வின் உயிர்மூச்சாகும். இறையிடத்தும், திருச்சபையிடத்தும் திறந்த உள்ளத்தோடு, ஆழ ஊன்றி ''உலகமே என் வீடு'' சிலுவையே என் வாழ்வு, துயரில் அஞ்சா நெஞ்சம், இலட்சியத்தில் உறுதி, திடன் கொண்ட சித்தம், சுறுசுறுப்பு ஆகிய பண்புகள் உன்னிடம் உண்டா? உம்மை நாம் 'வா' எனக் கை நீட்டி அழைக்கின்றோம்.

அருட் செல்வி. இராணி மைக்கல்
ம. பி. ச. F. M. M.

## தவக்காலக் கருத்தரங்கு

அக்கரைப்பற்று - திருக்கோயில் பங்கு மக்களுக்கான தவக்காலக் கருத்தரங்கு பங்குனி மாதம் 8 ம் திகதி முதல் 11ம் திகதி வரை முறையே பொத்துவில், திருக்கோயில், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் நடைபெற்றது.

மறைந்த இல்லற திருத் தொண்டர் S. அன்டனி, மறையாசிரியர் பிரான்சிஸ் ஆகியோருடைய ஒத்துழைப்புடன் பங்குத் தந்தை நோயல் இம்மானுவல் அடிகளாரால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கருத்தரங்கினை மறைமாவட்ட மறைக் கல்வி இயக்குனர் அருட்திரு தேவதாசன் அடிகளும் அவரது குழுவும் நடத்தினர்கள்.

காலத்துக்கேற்ற கருத்தரங்காக இது அமைந்ததால் அக்கரைப்பற்று - திருக்கோயில் பங்கு மக்கள் முழு ஒத்துழைப்பும் தந்து பயனடைந்தார்கள்.

## தேற்றாத்தீவு

## புனித யூதாததேயு திருநாள்

தேற்றாத்தீவு புனித யூதாததேயு திருநாள் சென்ற 7 - 4 - 89 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் செபமாலையும், நவநாளும் இடம் பெற்றன. ஒன்பதாம் நாள் 15 ந் திகதி அருட்திரு டிக்கோனிங் அடிகளார் தலைமையில் இறுதி நவநாள் நடைபெற்றது. அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள். அருட்சகோதரிகள் பக்தர்கள்புடை சூழ திவ்விய நற்கருணை நாதரின் பவனி இடம் பெற்றது. அன்றிரவு மட்/ திருமலை கலை - இலக்கிய மன்றம் திருமறையை, பாட்டு, நடனம், நாடகம் மூலம் பக்தர்களுக்கு நடித்துக் காட்டியது. இதற்கு அருட்திரு தேவதாசன் அடிகளார் தலைமை தாங்கினர். மிகவும் சிறப்பாகவிருந்தது.

அடுத்த நாள் காலை 7 - 45க்கு திருநாள் திருப்பலிஅதி, வந்தனைக்குரிய மட்/ திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் நான்கு குரவர்களுடன் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. இறுதியாக புனிதரின் திருச் சுரூப சுற்றுப்பிரகாரமும், பங்குக் குரு அருட்திரு கிங்ஸ்லி றொபேட் அவர்களால் சொரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளின் பின் பக்தர்கள் கூடுதலாக வந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. தங்குமிட வசதிகள் யாவும் பங்கு இளைஞர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தகவல்:-

அன்ரனி பெனடிற் செல்வருயன்,
கல்முனை - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி...

# குறளோவியம்

சென்ருலும் ஏதாவது ஒரு சிறுபொருளை அவர் அறியாமல் பைக்குட்போட்டு கொண்டு வந்து விடுவார்கள் கேட்டால் "இதனைப் போய் களவு என்கிருயா? வா இதைப்போல நூறு பொருள் வாங்கித் தருகிறேன்'' என்பார்கள் பொருள் சிறிய ஊசியே ஆனுலும் களவு களவு தானே. நம் சிருர்கள் குழந்தைகளிடையே இந்தப் பழக்கம் நிறைய உண்டு. பக்கத்து வீட்டுக் குழந்தையின் பொம்மையை அதற்குத் தெரியாமல் தன் வீட்டிற்குக் கொண்டுவருவதை நாம் அவ்வளவாகப் பெரிதுபடுத்துவதில்லை. அதே நேரம் நம்வீட்டில் அதைவிட நல்ல பொம்மைகளும் இருக்கலாம். ஆனுல் குழந்தை மனத்தில் களவென்ற விஷவித்து அப்போதிருந்தே ஊன்றப்படுவதை கண்டு கொள்ளவேண்டும். பெரியவர்களானதும் பிறன் பொருளை செல்வத்தை இச்சித்து திருடுவது திடீரென ஏற்பட்ட பழக்கமென்று யாரும் நினைக்கக் கூடாது. ஆனுல் இல்லாமை சிலரைத்திருடத் தூண்டுகிறதென்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. எனினும் களவின் மூலம்...... திரட்டிய பொருள் குறுகிய காலம் நல்லின் பத்தைத் தரும். சொகுசான வாழ்வைத் தரும் அதேபோலவே அக்குற்றத்திற்கான தண்டனையும் துன்பமும் துயரமும் எள்ளளவும் குறைவின்றி வந்து சேர்ந்து வருத்தும் இதையே இந்தக் குறள் சுட்டி நிற்கிறது.

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்

(அறத்துப்பால் குறள் 284)

எனவே தனக்குரியதல்லாத பிறர்க்குரிய பொருளை ''களவாகக் கவர்தல் வேண்டும்'' என்று உள்ளத்தால் நினைப்பதும் ஒரு குற்றமாகும். எனவே அவ்வாறு நினைக்காதிருக்க வேண்டும் களவை துறக்கவேண்டும் விலக்க வேண்டும்.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்

(அறத்துப்பால் குறள் 282)

இனி மற்றுமொரு மனித நடத்தை பற்றி ஆராய்வோமா? மிகவும்... மலிதான மனித நடத்தை பொய் சொல்லுதல். சிறுகுழந்தை முதல் குடுகுடுகிழவன் வரை அரசன் தொடக்கம் ஆண்டி வரை பொய்சொல்லாமற் தப்பியோர் எவருமில்லை. பொய்களை அவற்றின் தன்மை அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கலாம். முதல்வகை எதுவித தீமைகளையும் ஏற்படுத்தாத பொய்கள், மறுவகை தீய பாரதூரமான வகை. முதல்வகைக்கு வள்ளுவர் ஆதரவளிக்கிருர்.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரை தீர்த்த
நன்மை பயக்கும் எனின்

(அறத்துப்பால் குறள் 292)

நன்மையைத் தரவல்லதாயின் பொய்யும் உண்மையாகவே தகுதி கொள்ளப்படும்... என்கிறது இக்குறள். ஆனுல் அதே வேளை தானறிந்த பொய்யினைத் தன் மனச்சாட்சிக்குப் பொய் எனத்தெரிந்ததைப் பிறருக்குதீமையை உண்டுபண்ணும் பொய்யினைச் சொன்னுல் பின் வருங்காலை தன்னுடைய மனச்சாட்சியே தன்னை சுட்டிக்காட்டி வருத்தும், துன்பந்தரும் கெடுதல் தரும் நாசமாக்கும் எனவும் எச்சரிக்கின்ருர்.

தன்நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்


(அறத்துப்பால் குறள் 293)

சில மனித நடத்தைகளைப் பற்றி ஆராய்ந்தோம். வான்மறை தந்த குறிப்புகளையும் கண்டோம். மனிதர்கள் சூழ்நிலையின் புத்திரர்களாகையால் ஆனைக்கும் அடிசறுக்கும் என்ற வாக்கிற்கமைய சிலவேளை நடத்தையினுல் தீயவற்றைச் செய்யினும்... பிற்காலத்தில் தவறுணர்ந்து வருந்தி வழுத்தங்காலை எதிர்காலத்தில் தமது நடத்தைகளை செம்மையாய்ச் சீரமைக்குங்கால் அவர்களைப் பற்றிய உண்மையான சமூக மதிப்பீடின் உயர்வடைய இடமுண்டு.

எம். கணேசமூர்த்தி
மாகோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் முதலாவது இல்லறத்தியாக்கோன் எஸ். அன்ரனி அவர்கள் இறைபதம் சேர்ந்தார்

தன்னுமுனைக்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா அன்ரனி அவர்கள் திருமலை- மட்டுநகர் மறைமாவட்டத்தில், 23 ஆண்டுகள் மறைப்போதகர் பணியாற்றிச் சரித்திரம் படைத்தவர், 2ம் வத்திக்கான் திருச்சங்க மறுமலர்ச்சியின்பின், இல்லறத்திலிந்து தொண்டாற்ற, இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தது திருச்சபை. அழைப்பை ஏற்ற அன்ரனி என்ற இளைஞன், இறைவனின் பணிசெய்யத் தன்னையே அர்ப்பணித்தார். 1965ம் ஆண்டு ஆனித்திங்கள் முதல் 1967ம் ஆண்டு சித்திரைத்திங்கள்வரை, தமிழ் நாடு திண்டிவனம் வேதியர் பயிற்சிப்பள்ளியில் இரண்டு ஆண்டுகள், இறையியல், திருவழிபாடு, போதனாமுறை இவைகளிலும், இன்னும் பல்வேறு துறைகளிலும், பயிற்சியும் அனுபவமும் பெற்றுத்தாயகம் திரும்பினார். 1967ம் வருடம் ஆவணித்திங்கள், மேதகு இக்னேஷியஸ் S J. ஆண்டகை அவர்களால் மட்டுநகர் மரியன்னை இணைப்பேராலயத்தில், தன்னுடன் பயிற்சிபெற்ற ஐந்து மறையாசிரியர்களுடன், அனுப்புதல் சடங்கில் ஒன்றித்து மக்கள் மத்தியில் சென்று பணியாற்ற அனுப்பிவைக்கப்பட்டார்.

முதன் முதலில் இவரது பணி அவரது சொந்த ஊராகிய தன்னுமுனையில் அமைந்தது. இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய பின் வாகரைப் பங்கிற்குப் பணியாற்றச்சென்றார். அப்பங்கில் பத்து ஆண்டுகளாக நற்பணியாற்றினார். இவரது பணி புல்லுமலைக்குத் தேவைப்பட்டதால், புல்லுமலைப்பங்கிற்கு மாற்றப்பட்டார். புல்லுமலைப்பங்கிற்கு உட்பட்ட கித்துள், கோப்பாவெளி, வெலிக்காக்கண்டி போன்ற சிறிய சிறிய கிராமங்களுக்கு கால் நடையாகச்சென்றே பணிகள் புரிந்தார். 1978ம் ஆண்டு வீசிய சூறாவளியில் அன்ரனி அவர்களின்கால் ஒன்று பாதிப்புக்குள்ளானது. இறைவனின் அருளால் குணமடைந்து தன் பணியை ஆர்வத்துடன் மேற்கொண்டார். இப்பங்கில் எட்டு ஆண்டுகள் உழைத்தபின்னர், இறைவனின் அழைப்பு இவரைப் பொத்துவில் பங்கிற்கு மாற்றியது. இரண்டு ஆண்டுகள் பணியாற்றியபின், அவரது பணியில்ஒருபடி உயர்வுகிடைத்தது. ஆயர் ஜோசேப் கிங்ஸிலி அவர்களால், இல்லறத்தியாக்கோன் என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டார். இலங்கைத்திருச்சபை வரலாற்றிலே இவரே முதல் இல்லறத்தியாக்கோன் ஆவார்.

குருக்கள் செல்லமுடியாத இடங்களில் இவர் திருமுழுக்குக்கொடுக்கவும், திருமணங்களை மந்திரிக்கவும், நற்கருணை வழங்கவும், இன்னும் பல ஆசீர்களைக் கொடுக்கவும் அனுமதி பெற்றார், இதன் காரணமாக இவரது சேவை மேலும் வளரத்தொடங்கியது. பங்குத் தந்தை இல்லாத,திருக்கோயில், பொத்துவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமாரி, தாண்டியடி போன்ற இடங்களில், ஒரு பங்குத்தந்தையைப் போல இருந்து, மக்களின் தேவைகளை அறிந்து பணிசெய்தார். பலமுறைகளில் இலங்கை, இந்திய இராணுவத்தினரின் துன்புறுத்துதல்களுக்கும் இவர் உள்ளாக்கப்பட்டார்.

இவர்பணியாற்றிவந்த பகுதியாகிய உடும்பன்குளத்தில் அப்பாவிப் பொதுமக்கள் நூற்றுக்கும் அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டனர். உயிரோடும் எரிக்கப்பட்டனர். அவ்வேளையில் இவரும், அப்போது பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு L. K. மரியதாசன் அடிகளாரும் உடும்பன்குளப்பகுதியைச் சென்று பார்வையிட்டனர். அன்றிலிருந்து இரண்டு ஆண்டுகளாக அன்ரனி அவர்கள் கடும் காய்ச்சலால் துன்பப்பட்டார். இறைவனின் அருளால் இந்நோயினின்று குணம் பெற்று பணியைத் தொடர்ந்தார். மக்களைக்கவர்வதிலும், வழிபாடுகளில் மக்கள் அர்த்தமுள்ள வகையில் பங்கெடுப்பதற்கும், அன்ரனி பல யுக்திகளைக் கையாள்வார்.

இவையெல்லாம் இவரிடமிருந்த சிறந்த திறமைகளும் ஆற்றல்களுமாகும். மறைப்போதகராக இருந்து பணியாற்றும் காலத்தில் இவர் திருமணவாழ்விலும் ஈடுபட்டார். தன்னுமுனையைச் சேர்ந்த குருசுத்தம்பி புஸ்பமேரியைக் கரம்பிடித்தார். இவர்கள் இருவருக்கும் ஐந்து குழந்தைகள் கிடைத்தன. அவர்களில் நான்கு பெண்கள் ஒரு ஆண் மகன். கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டான குடும்பமாக. அன்பின்பிணைப்பிலும், உறவின் பந்தத்திலும் இவர்கள் குடும்பம், சான்று பகர்ந்தமை குறிப்பிடத்தக்கது. போதகர் அன்ரனி அவர்கள தான் பணியாற்றும் பொத்துவில் பங்கில் அமைக்கப்பட்டுள்ள ''தியாக்கோணியா'' பணிநிலையத்தில, (இல்லம்) இம்மாதம் 7ம் நாள் வெள்ளி, தனது துணைவியாருடனும் மூன்று மக்களுடனும் நித்திரையிலிருந்த நேரம் 8ம் நாள் சனி அதிகாலை 3மணியளவில் நித்திரையிலேயே இறைவன் அவரைத்தமது விண்ணக வாழ்வுக்கு அழைத்துக் கொண்டார். இவரது இழப்பு அன்னாரது மனைவி மக்கள் உறவினர்களுக்கு மட்டுமல்ல, திருமலை-மட்டு நகர் மறை மாவட்டத்திற்கே ஒரு பேரிழப்பாகும். இவரது ஆன்மசாந்திக்காகவும், இவரது பிரிவால் துன்புறும் இவரது குடும்பத்திற்காகவும் இறைவனை மன்றுடும்படி வேண்டுகிறோம்.

திருமலை- மட்டுநகர் மறையாசிரியர் ஒன்றியம்.

## பரிசு பெற்றூர்கள்!

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடாத்திய தமிழ் மொழித்திறன், கவிதைத் தேர்வுகளில் மட்டக்களப்பு மாணவர்கள் பரிசு பெற்றுள்ளனர்

1) தமிழ் மொழித்திறன் - உயர் நிலைத் தேர்வு
**செல்வன் மு. கனகசூரியம்**
புனித மிக்கேல் கல்லூரி,
மூன்ரும் பரிசு

2) கவிதை - முதனிலைத் தேர்வு
**செல்வன் அன்ரன் யோசப்,**
புனித மிக்கேல் கல்லூரி
முதலாம் பரிசு
**செல்வி. வாசுகி குணரெட்ணம்**
வின்சன் மகளிர் கல்லூரி
இரண்டாம் பரிசு.
வெளியாருக்கான போட்டியில்
கவிதை - 2ம் பரிசு
**செ. குணரெத்தினம்**

* யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சிறுவர் இலக்கிய ஏடான 'அர்ச்சுனு' நடாத்திய சிறுகதைப் போட்டியில் மட்/புனித மிக்கேல்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் அன்ரன் யோசப் மூன்ருவது பரிசைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியப் புதிர் - 9

''உலகமெங்கும் சென்று நற்செய்தியினை அறிவியுங்கள்'' என்ற இறை மகன் இயேசுவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே மறைபரப்புப் பணிக்கு அர்ப்பணித்தவர்கள் அப்போஸ்தலர்கள். அவர்களின் சொல், செயல் அனைத்தையும் சித்தரிப்பதுதான் அப்போஸ்தலர் பணி கீழ்க் காணும் வசனங்களைப் பேசியவர் யார் என்பதை அப்போஸ்தலர் பணியிலிருந்து கண்டு பிடியுங்கள்.

1. ''எழுந்திரு, கால் ஊன்றி நேராக நில்'' ..........
2. ''வெள்ளியோ பொன்னோ என்னிடம் இல்லை. என்னிடம் உள்ளதை உனக்குக் கொடுக்கிறேன்.'' ..........
3. ''கடவுள் பக்கம் மனந்திரும்புகின்ற புறவினத்தாருக்கு தொல்லை கொடுத்தலாகாது'' ..........
4. ''படிப்பதன் பொருள் உமக்கு விளங்குகின்றதா?'' ..........
5. ஆண்டவரே இப்பாவத்தை இவர்கள்மேல் சுமத்தாதீர்.'' ..........
6. நீர் பார்வை அடையவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பெறவும் அவர் என்னை அனுப்பினார்.'' ..........
7. ''இக் கச்சைக்குரியவனை எருசலேமில் யூதர்கள் இது போலத்தான் கட்டுவார்கள்'' ..........
8. ''ஐயன்மீர், மீட்படைய நான் என்ன செய்ய வேண்டும்?'' ..........
9. ''நீ சொல்வதை நம்பச்செய்து, சிறிது நேரத்திற்குள்ளே என்னைக் கிறிஸ்தவனாக்கி விடுவாய் போலிருக்கிறதே'' ..........
10. ''மனிதருடைய செயலாயிருந்தால் சிதைந்து போம். கடவுளுடையதாயின் நீங்கள் அவர்களைத் தொலைக்கமுடியாது'' ..........

பெயர்: ..........

முகவரி: ..........

..........

பரிசு: ரூபா 50/-, 25/- முடிவுத் திகதி: 31-05-89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியப் புதிர் - 7
## முடிவுகள்

1. தோமையார்
2. தலைமைக் குரு
3. மால்குஸ்
4. பிலாத்து
5. அருளப்பர்
6. அரிமத்தியா ஊரரான சூசை
7. இராயப்பர்
8. பரபாஸ்
9. மதலேன் மரியாள்
10. யூதாஸ்

### பரிசு பெறுவோர்

**1 ம் பரிசு**

திருமதி. R. டானியல்
18/1 அதிகார் வீதி
மட்டுநகர்

**2 ம் பரிசு**

மார்க் ஜோர்ஜ்
'நவதீபா'
தாளங்குடா - 3 காத்தான்குடி

### பாராட்டுப் பெறுவோர்

1) செல்வி. இருதயநாயகி கந்தையா
இல 182 புதிய கல்முனை வீதி
கல்லடி, மட்டக்களப்பு.

2) T. ஞானசௌந்தரி
பாடசாலை வீதி, குருக்கள்மடம் - E P.

3) இராயப்பு மிக்கேல்
தாளங்குடா - 2 காத்தான்குடி

4) S. S. சியாமளா
ஆஸ்பத்திரி வீதி, மன்னம்பிட்டி.

5) A. எனஸ்டினு
46/7 றெபட் குணவர்த்தன மாவத்த
கிருலப்பனை கொழும்பு 6.

பங்குபற்றியோர் - 103

சரியான விடையளித்தோர் - 36

அனைவருக்கும் எமது நன்றி

குறிப்பு:- தொண்டனில் வெளியாகும் விவிலியப்புதிர் கூப்பனில் நிரப்பி அனுப்பப்படும் விடைகளே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

—ஆசிரியர்—

## தவக்கால
## ஞான ஒடுக்கம்

திருமலை பிராந்திய வின்சன் டி பவுல் சபையினர் தங்களது தவக்கால ஞான ஒடுக்கத்தை, 10-03-89 முதல் 12 - 03 - 89 வரை புனித வளனுர் தமிழ் வித்தியாலயத்தில் நடத்தினர். இதற்கு பிராந்திய ஆலோசனை சபைகளிலிருந்து 31 அங்கத்தவர்கள் சமூகம் அளித்திருந்தனர்.

ஞான ஒடுக்கத்தை நிலாவெளிப் பங்குத்தந்தை அருட்திரு. பிலிப் அடிகளார் நடாத்தி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தொண்டனே! நீயும் உபவாசமா?

மார்ச் மாதத் தொண்டன் மிகவும் மெலிந்த நிலேயில் எமது கரம் கிடைத்தது. தவக்காலம் என்பதால் தொண்டனும் உபவாசம் இருந்து நோன்பு நோற்றிருப்பானே? அல்லது போஷாக்குணவு கிடைக்காததனுல் ஏற்பட்ட விபரீதமோ? நாம் அறியோம்

சமாரியன் உவமையை இன்றைய கால கட்டத்துடன் ஒப்பிட்டுத் தொகுத்தளித்த றெக்ஸ் ஜோசப் அவர்களேப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

திரு. ஜே. அருளப்பு,
காத்தான்குடி.

## நல்ல நினேவுகள்

பேராசிரியர் வித்தி அவர்களின் நினேவுகளே மீட்டு தொண்டன் வாசகர்களுக்கு அளித்த திரு ரீ. பாக்கியநாயகம் அவர்களுக்கு எமது நன்றிகள். றெக்ஸ் ஜோசப் அவர்களின் நல்ல சமாரியன் உவமை காலத்துக்கு ஏற்ற கருவூலமாக அமைந்துள்ளது.

செல்வி. கலிஸ்ரா
அம்பாறை

## பாராட்டு.

'எல்லாம் நிறைவேறிற்று' என்ற கட்டுரை வாசித்தேன். மனதிற்கு தெளிவாகவும், நிறைவாகவும் இருந்தது. செ. தேவராசாவுக்கு எனது பாராட்டுக்கள். தெளிவான சிந்தனேயைத் தரக்கூடிய ஆக்கபூர்வமான கட்டுரைகளே தொண்டனில் நிறைய எதிர் பார்க்கின்றேன்.

சி. கோகிலா
மட்டக்களப்பு.

## தெரிந்து கொண்டேன்!

இலங்கையில் சிறுபான்மையோர் பிரச்சினே. தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலேப்பில் அமைந்த சி. வசந்தராசபிள்ளே அவர்களின் கட்டுரை, சிறுபான்மையோரின் பிரச்சினேயின் அடிமட்டம் தெரியாத என்னேப் போன்றவர்களுக்கு பேருதவியாக இருந்தது

எம். எஸ். வின்சன்ற்
இருதயபுரம்.

சித்திரைத் தொண்டனில் வெளிவந்த 'இலங்கையில் சிறுபான்மையோர் பிரச்சினே' பற்றிய கட்டுரை மிகத் தெளிவாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது.

எம். எல். சுதா
மட்டுநகர்.

## காலத்துக் கேற்றது.

மாசி மாதத் தொண்டன் இதழ் தந்த 20ம் நூற்றுண்டின் நல்ல சமாரியன் படைப்பு காலத்துக்கேற்ற ஆழமான உண்மைக் கருத்துக்களேப் பொதித்திருந்தது.

ஜெ. டேவிற்- ஆசிரியர்
சொறிக்கல்முனே.

## ஏன்? ஏன்?

மாணவராகிய எம்மை நட்டாற்றில் விட்டதுபோல் மாணவர் பக்கத்தை இடை நடுவே நிறுத்தி விட்டது ஏன்?

செல்வி. ஜெயந்தி கிறகோரி
சொறிக்கல்முனே

(நிறுத்தவில்லே, இடநெருக்கடியால் ஓர் இடைவெளி அவ்வளவுதான் நாம் சொல்வது உண்மை என்பதை இந்த இதழ் உங்களுக்கு உறுதிப்படுத்தியிருக்குமே- ஆ- ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்து வரும்

காலம்: 6, 7, 8 - 5 - 89

நேரம்: காலை 5 - 50 மணி

**கத்தோலிக்க நற்சிந்தனை**

வழங்குபவர் :

**திரு. எஸ் மைக்கல் அவர்கள்**

★

காலம்: 9 - 5 - 89

நேரம்: மாலை 8-30மணி

**சிறுவர் உலகம்**

* **மன்னிப்பு - குறுநாடகம்**

மட் / புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள்

★

காலம்: 14 - 5 - 89

நேரம்: மாலை 7 - 00மணி

**மரியாள் வருகிறாள் - சித்திரம்**

எழுதியவர்: **கலைமணி**

★

காலம்: 20, 21, 22, - 5 - 89

நேரம்: காலை 5 - 50 மணி

**கத்தோலிக்க நற்சிந்தனை**

வழங்குபவர்: **அருள் சகோதரி றூவிரு**

★

காலம்: 23 - 5 - 89

நேரம்: மாலை 6 - 45 மணி

**சிறுவர் உலகம்**

* **அன்னையும் பிதாவும் - குறுநாடகம்**

★

காலம்: 28 - 5 - 89

நேரம்: மாலை 7 - 00 மணி

**புதிய உலகம்**

* கோயிலுக்கு வெளியே - சிறுகதை
* பேசும் பாத்திரம்

★

நிகழ்ச்சித் தொகுப்பு: **மலர்வேந்தன்**

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 30 - 4 - 89ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org